கடவுள் துணை

# செந்தமிழ்.

MADRAS

தொகுதி-ரு] பராபவஹு தைமீ [பகுதி-கூ

## நிகண்டுகள்.

வடமொழி தென்மொழிகளிலே, நிகண்டு என்பது, சொற்களின் பொருளை விளக்கும் நூல்கட்குப் பெயராக வழங்குகிறது. நன்னூல் விருத்திகாரர் நிகண்டு என்னுஞ் சொல் இடுகுறிப்பெயர் என்பர். இதனைச் (சொற்களின்) கூட்டம், தொகுதி என்னும் பொருளில் வந்த "நிக்ரந்து" என்பதன் திரிபு என்று கூறுவாருமுண்டு. இந்நிகண்டுகள்; கவிரூபமாகவும் சூத்திரரூபமாகவும் மாணுக்கர் எளிதில் மனப்பாடம் பண்ணுதற்கு ஏற்றபடி, முன்னோராற் செய்துவைக்கப் பட்டுள்ளன. பாஷைபில் அழுத்தமான ஞானத்தை நம்முன்னோர் இந்நிகண்டுப்படனத்தாலே மிகுதியும் அடைந்துவந்தனர். நச்சினார்க்கினியர் முதலிய புலவர்பெருமக்கள் எந்தச் சதுராகராதி வின்ஸ்லோ அகராதிகளைக்கொண்டு தம் அருங்காரியங்களைச் சாதித்தார்? அவர்கள் மனத்தில் நின்ற சொற்கடல்முன் அவ்வச்சு அகராதிகள் குட்டங்களேயன்றோ! ஆகவே, நிகண்டு கற்று இலக்கிய விலக்கணந்தொடங்கிய நம்முன்னோரது வழக்கம், அவரது அழுத்தமான பாஷாஞானத்துக்கு முக்கிய காரணமாயிருந்ததென்பதில் ஐயமில்லை. இத்தகைய நிகண்டுநூல்கள், அந்நியதேசத்தவர்க்குப் புதியனவாகத்தோன்றினும், நமக்கு அவை இன்றுநேற்றுக் கிடைத்தவையல்ல; ஆரியருஷிகள் வேதத்துக்கு அங்கங்களாக வகுத்த ஆறுவகைச் சாஸ்திரங்களுள்ளே நிருத்தம் என்பது ஒன்று. இந்த உலகியற் சொல்லொழித்து, வைதிகச்சொற்களின் பகுதி விகுதி முதலிய உ

றுப்புக்களைக்காட்டி, பதப்பொருள் முதலியவற்றை விளங்கவுரைக்கும் ஒரு கருவி நூலாம். இச்சாஸ்திரத்தை வேதத்திற்குச் செவியெனப் புனைந்து கூறுவர். "கற்பங் கைசந் தங்கால் எண்கண், தெற்றென னிருத்தம் செவிசிக்கை மூக்கு, உற்ற வியாகரணமுகம் பெற்றுச், சார்பிற் றோன்றும் ஆரண வேதா" என்பது மணிமேகலை. இந்நிருத்தவகையுள்ளேதான் நிகண்டு நூல்களையும் அடக்கிக் கூறுவர். இதனால், முற்காலந்தொடங்கியே, பதப்பொருள் கூறும் நூல்கள் பூர்வீகரால் கையாளப்பட்டுவந்தது என்பது வெளியாம். இந்நிருத்தம் வைதிகச் சொல்லையே ஆராய்வதாகலின், அதனுடன் உலகியற்சொல்லையும் ஆராய்கின்ற நிகண்டு நூல்களே யாவர்க்கும் உபயோகமாவன. இந்நிகண்டு; வடமொழியில், அமரசிஹ்மம், அமரதத்தம், விசுவம், விஷாமிர்தம், சப்தார்ணவம், சாஸ்வதவிலாசம் முதற் பலவாகவுள்ளன. தென்மொழியில்; திவாகரம், பிங்கலம், சூடாமணி, உரிச்சொல், கயாகரம், அகராதி, ஆசிரியம் முதலியன. இந்நிகண்டுகளெல்லாம் தமிழ்மொழிப்புணர்ச்சிக்கு இன்றியமையாதனவாக முன்பிருந்தனவாயினும், அகராதிகள் வெளிவரவே, இவற்றின் பயிற்சி நின்று வருகின்றது. ஏனெனில், அவ்வகராதிப்பிரதியொன்று பக்கத்துக்கிடக்குமாயின் பதப்பொருள்களையெல்லாம் மனனம் பண்ணியதுபோலவே அஃது உதவுவதாகின்றது. ஆகவே, இன்னுஞ் சிலகாலத்துள் நிகண்டுகள் பழைமைபெருமைபற்றி மட்டும் போற்றற்குரிய நூல்களாய், முற்றும் வழக்கு ஒழிந்துவிடுமென்றே தோன்றுகிறது. இது பெரிதும் இரங்கத்தக்க சம்பவங்களுள் ஒன்றே.

## க. திவாகரம்.

தமிழில் வழங்கும் நிகண்டுகள், அவ்வக்காலத்து வழக்குகளைத் தழுவித் தக்கவர்களாற் செய்யப்பட்டன. இவற்றுள் திவாகரமே முன்னது. இதிற் சங்கத்துச்சான்றோர் வழக்குகள் மிகுதியாம். பிங்கலந்தை அதினும் பிற்பட்டது; பிறசான்றோர் வழக்குகளை இதிற்காணலாம். ஏனைய நிகண்டுகளில் பிற்கால வழக்குகள் பயிலும். இவற்றையெல்லாம் விளக்குதற்கு இஃது இடமில்லையாயினும், நிகண்டுகளைப்பற்றித் தனித்தனியேபேசும்போது முக்கியமானவற்றைக்

குறித்து எழுதப்படும். இனி, இந்நிகண்டுகளின் ஆதிவரலாறுகள் செந்தமிழ்மக்கட்கு இன்பந்தரத்தக்கனவாதலால், அவற்றை ஒவ்வொன்றாகக் காலமுறைப்படியே வைத்து என் சிற்றறிவிற்கேற்ப ஆராய்வேன். இம்முறையில் திவாகரம் முந்தியதென்று முன்னரே கூறினேன். இதற்கு முதனூல் ஆதிதிவாகரம்என்பதொன்று எனச் சிலர் கூறுவர். அவ்வாறு ஒன்றுண்டென்பது எதனாலும் பெறப்படாமையால் அஃதிண்டாராய்ச்சியில்லை. இந்நூல் சேந்தன் என்னும் சிற்றரசன் வேண்டுகோளின்படி திவாகரமுனிவரால் செய்யப்பட்டது; இதுபற்றிச் சேந்தன் திவாகரம் எனவும் வழங்கும். இச்சேந்தன் என்பவன், காவிரிக்கரையிலுள்ள அம்பர் என்னும் நகர்க்கு அதிபதியென்பதும், ஆரியகுலத்தவனென்பதும், கல்விகேள்வி மிக்கவனென்பதும், வடமொழி தென்மொழிகளிற் செய்யுளியற்றும் வன்மையுடையவனென்பதும், இரவலர்க்கும் புலவர்க்கும் பெரியகளைகணாவனென்பதும் திவாகரத்தால் விளங்குகின்றன. அன்றியும், சம்பாபதி என வழங்கப்படும் புகார்த்தெய்வத்திற்கு அந்தாதியும்; ஸ்ரீராமபிரானது கோதண்டம், அருச்சுனன் காண்டீபம், முருகக்கடவுள் வேலாயுதம்—இம்மூன்றற்கும் புகழ்ச்சிப்பாடலும் பாடினவனென்னும், இத்தகைய குணவிசேடங்களுடைமையால் நல்லிசைப்புலவராகிய ஔவையாற் புகழப்பட்டவனென்னும் அந்நிகண்டின்தொகுதியிறுதிக்கட்டுரைகள் கூறுகின்றன. புறநானூற்றில் ௩௮௫-ம் பாடலாகிய "வெள்ளிதோன்றிய" என்னும்பாட்டுக் கல்லாடனார் இச்சேந்தனைப்புகழ்ந்து கூறியதாம். இவற்றால் திவாகரம் நல்லசங்ககாலத்தேதோன்றிய பெருமையுடையதென்பது ஐயமின்றிப் போதரும். வேறுவிதமாகச் சொல்லின், இற்றைக்கு 1800-வருஷங்கட்கு முந்தியது என்னலாம்.

இனி, திவாகரத்துள்ளே புகுந்தாராயின், அதிற் பிற்காலவழக்கொன்றும் காணமுடியாதென்பது திண்ணம். பிற்பட்ட நிகண்டுகளிற்போல, தமிழ்வள்ளலார் எழுவர்பெயர் இதிற் குறிக்கப்படவில்லை. இதன்காரணத்தை அறிதலரிது. அவ்வெழுவரும் திவாகரம் செய்யப்பட்டகாலத்தும் அதன்பின்னரும் விளங்கியவராதலின், இந்நிகண்டுடையார் அவரை வரையறுத்துத் தொகைகோடல் முடியா

தன்றே. பின்வந்த பிங்கலர் முதலியோர்க்காயின், அவ்வாறு செய்தல் அமையும். இவ்வாறே பின்வந்தவராகிய குமணனையும் நல்லியக்கோடனையும் பாடியபுலவர்கள் அவ்வேழுவள்ளல்களையுஞ் * சுட்டித் தொகைகொண்டமை காண்க. இனி, பல்லவரென்னுஞ் சொல்வழக்கம் திவாகரர்க்குத் தெரியவராதது. பிந்திய நிகண்டுகளில் அது காணப்படும். ஆனல், சளுக்கியவரசரைப்பற்றித் திவாகரம் கூறுகின்றது. இவர் வேள்புலவரசர் என்று குறிக்கப்பட்டுள்ளார். வேள்புலம் என்பது இப்போது பம்பாய்மாகாணத்தைச் சார்ந்த ஒரு பகுதியென்பதும் பிறசளுக்கியர்வரலாறுகளும் முன்னரே என்னால் விளக்கப்பட்டுள்ளன. இவ்வரசர் வராகத்துவசம் உடையவரென்பது, திவாகரத்தில்,"கேழல் வேள்புல வரசர் கோடியே" எனவருவதனல் தெரிகிறது. பிற்பட்ட சளுக்கியசாஸனங்களில், "பாலித்துவசம்" என்பதன்றி இவர்க்கு வராகக்கொடி காணப்படவில்லையாயினும் வராகமுத்திரை அவற்றிற் கூறப்படுகிறது. பாலித்துவசமும், பிந்திய சளுக்கர்கொண்டதேயன்றி பழையசளுக்கியரதன்மை சாஸனத்தாலே அறியப்படுதலால், அப்பழையவர்க்கு, முத்திரை போலக் கொடியும் பன்றிவரைந்ததாகவே யிருக்கலாமன்றோ! இனி, பூழியன் என்னும் பெயர், பாண்டியனுக்கின்றி, சேரனொருவனுக்கே திவாகரத்திற் காணப்படுகிறது. சங்கநூல் முழுதுந் தேடினும் இவ்வாறே அதனைக் காணலாம். பதிற்றுப்பத்துப் பதிகமொன்றில், களங்காய்க்கண்ணி நார்முடிச் சேரல் என்பவன், "பூழிநாட்டைப் படையெடுத்துத் தழீஇ" என்று புகழப்படுதலால், அவன் காலமுதல் 'பூழியன்' என்னும்பெயர் சேரற்கு வழங்கியதாகக் கருதலாம் இப்பெயர்வழக்கம், முத்தொள்ளாயிரமுடையார் திருமங்கையாழ்வார் காலம்வரையிலும் சேரற்கு வழங்கிவந்ததென்பது, † "பூழியர் கோக்கோதை" எனவும், "பரனே பஞ்சவன் பூழியன் சோழன் பார்மன்னர்மன்னர்" எனவும் வரும் அவ்விருவர் வாக்காலுந் தெரிகின்றது. பிற்பட்ட நிகண்டுகளிலும் நூல்களிலுந்தான் இப்பெயர் பாண்டியர்க்கு வழங்கத் தொடங்குகிறது. இவைபோன்ற சங்ககாலத்து வழங்கியசெய்

* புறம்-கருஅ; சிறுபாணாற்றுப்படை.

† முத்தொள்ளாயிரச் செய்யுட்கள்-கூஎ (செந்தமிழ்த்தொகுதி-ச) பெரியதிருமொழி எ. எ. ச.

திகள்பல திவாகரத்தில் அறியக்கிடத்தலால், சரித்திர வாராய்ச்சிக்கு இது பெரிதும் உபயோகமான தென்னலாம்.

## உ. பிங்கலம்.

இனி, அடுத்த பிங்கலத்தைப்பற்றிச் சிறிது ஆராயப்படும். இந்நிகண்டின் பாயிரத்தே இதனுசிரியராகிய பிங்கலமுனிவர் திவாகரர் புத்திரர் என்று கூறப்படினும், நூற்கணுள்ள சிலவழக்குகளை நோக்கும்போது, இது திவாகரத்திற்கு மிகவும் பிந்தியதாகவே எண்ணப்படுகிறது. உதாரணமாக:—பல்லவர் என்னும் பெயர் இழிஞர்க்கு இதிற்காண்கிறது. இதனால், பல்லவ அரசர் தம் நிலைகுலைந்து இழிவுற்றகாலத்தே பிங்கலந்தை செய்யப்பட்டதுபோலும் என்று கருத இடமுண்டாம். திவாகரத்தில் இச்சொல்வழக்கமே கண்டிதில்லை. இவ்வாறே பிற்கால வழக்குகளை அங்கங்கே இதிற் காணலாம். ஆயினும், இற்றைக்கு 725-வருஷங்கட்கு முந்தியதென்று தெளியப்பட்ட நன்னூலுக்கு முற்பட்டதென்பது "பிங்கல முதலா நல்லோருரிச்சொல்" என்பதனுற் றெளிவாம். திவாகரத்திற்கண்ட சளுக்கியர் முதலியவழக்கு பிங்கலந்தையிற் காணப்படினும், அவை, முன்னூலினின்று தழுவப்பட்டவை எனக்கொள்ளலே பொருத்தம். இது நிற்க. "குடம்பை தனித்தொழியப் புட்பறந் தற்றே, உடம்போ டுயிரிடை நட்பு" என்னுந் திருக்குறட்குப் பரிமேலழகர் கூறிய உரையில், குடம்பை—முட்டை என்றெழுதப்பட்டதை, அவ்வாறு முன்னூல்களிற்பொருள் வழக்கில்லை என றுமறுத்தாருமுளர். 'குடம்பை முட்டையுங் கூடு மாகும்" என்பது பிங்கலந்தைச் சூத்திரமாதலால், பரிமேலழகருரை முழுதும் ஆதாரவற்றதென்பது பொருந்தாமை காண்க. இச்சூத்திரம் ஏட்டுப்பிரதியிலுங்கண்டது.

## ங. சூடாமணி நிகண்டு.

இனி, இப்பிங்கலந்தையைக் காலத்தாலடுத்துக் கூறற்குரியது சூடாமணி நிகண்டு. இது வீரைமண்டலபுருடர் என்னும் ஜைனரால் இயற்றப்பட்டது. இவர் ஆசிரியர் திருநறுங்குன்றை-குணபத்திராசாரியர் என்பவர். மண்டலபுருடர் கிருஷ்ணராயர் காலத்தவரென்பது "கிருட்டிணராயன் கைபோற் கொடைமடமென்ப தம்ம வரையாது கொடுத்தலாமே" எனக் கூறுதலால் வெளியாகிறது.

இந்நிகண்டுடையாரே அருகதேவர்க்குப் புராணமொன்றும் இயற்றியிருந்தார் என்பது பாயிரத்தாலும், தொகுதியிறுதித் தற்சிறப்புப் பாடலாலும் அறியப்படும்.

இனித் தஞ்சைத் "தமிழகம்" என்னும் பத்திரிகையிலே ஸ்ரீமத். குப்புசாமிசாஸ்திரியவர்கள்,

"ஒருங்குள பொருளு மோர்ந்திட் டுரைத்தனன் விருத்தந்தன்னில்
இருந்தவை நல்லோர்குற்ற மியம்பிடா ரென்பதெண்ணித்
திருந்திய கமலவூர்தி திருப்புகழ்ப் புராணஞ்செய்தோன்
பரந்தசீர்க்குணபத்ரன்றன் பணிந்தமண் டலவன்றானே."

என்னும் பாடலில், "திருப்புகழ்ப்புராணஞ் செய்தோன்" என்னும் விசேடணத்தை "குணபத்திர" னுக்கேற்றி மகாபுராணத்தின் பிற்பாகமாகிய உத்தரபுராணத்தைச் செய்தவரும் இரட்டவரசனாகிய அமோகவர்ஷன் காலத்தவருமாகிய குணபத்திராசாரியரே மண்டலபுருடர் ஆசிரியரென்றும், அதனால் இந்நிகண்டின் காலம் இற்றைக்கு 1000-வருஷத்துக்கு முற்பட்டதாகல் வேண்டுமென்றும் எழுதியிருக்கிறார்கள். அவர்கள் ஆராய்ச்சி உண்மையிற் புகழத்தக்கதாயினும், சில விஷயங்கள் எமக்கு ஐயந்தருகின்றன. சூடாமணி நிகண்டுப் பாயிரத்திலே "சொல்லொடு பொருளுணர்ந்தோன்" என்னுங்கவி முதலாக "செகமெனும் பளிங்குமாட" என்னுங்கவியீறாக மண்டலபுருடராசிரியராகிய குணபத்திரர் புகழப்பட்டிருத்தலும், அவற்றுக்கு அடுத்தகவியிரண்டினும் மண்டலபுருடர் கூறப்படுதலும் நோக்குவார்க்கு நன்குபுலப்படும். இவற்றில் பிற்கூறியதிற்றான் "திருந்திய கமலவூர்தி திருப்புகழ்ப்புராணஞ் செய்தோன், பரந்த சீர்க்குணபத்ரன் றன்பணிந்த மண்டலவன்றானே" எனப்புராணச்செய்தி வருகிறது; இங்கேகூறிய "திருப்புகழ்ப் புராணஞ்செய்தோன்" என்பது உத்தரமகாபுராணஞ்செய்த குணபத்திரராயின், அவரைப்பற்றியபாடல்களிற் கூறும் விசேடணங்களோடு முக்கியமான இவ்விஷயமும் சேர்க்கப்படுவது முறையன்றோ? மண்டலபுருடரைப் புகழுமிடத்து, ஐயத்துக்கிடமான நிலையில், அத்தொடர் வைக்கப்பட நியாயமில்லை; ஆதலால் "திருப்புகழ்ப்புராணஞ் செய்தோன்" என்பது மண்டலவனுக்குக் கூறப்பட்ட அடையாகக் கொள்வதே நே

ரானதாம். சாஸ்திரிகள் சூடாமணி நிகண்டைப்பற்றி எழுதியதற்கு முன்பே வெளிவந்த மணிமேகலைப்பதிப்பில், மஹாமஹோபாத்தியாய—ஸ்ரீ. சாமிநாதையரவர்கள் "இந்நூலாசிரியர் சைநமதத்தினரும் பெருமண்டூர் என்கிற வீரபுரத்திலிருந்தவரும் அருகதேவன் சரித்திரத்தைப்புராணமாகச்செய்தவருமாகிய மண்டலபுருடரென்பவர்" (பக்-கூ.கூ0) என்றெழுதியிருத்தலால், அத்தொடர்க்கு அவர்கள் கொண்ட கருத்தும் நான் கூறியதேயாதல் காண்க. அன்றியும், சூடாமணி வாக்கையும் போக்கையும் நோக்கும்போது, சாஸ்திரிகள் கூறியபடி, அவ்வளவு பழங்காலத்துக்கு அஃதுரியதா என்ற ஐயம் தமிழறிஞர்க்குத் தோன்றாமலிராது.

ஆயின் குணபத்திராசாரியர் வேறு யாவர்? என்னுங் கேள்வி இங்கே யுண்டாகலாம். விஜயநகர ராயர்காலத்தில் அப்பெயர் தரித்த ஒருவர் இருந்திருத்தல் கூடாதென்பதற்கு நியாயமில்லை. அன்றி, அமோகவர்ஷன் காலத்துக் குணபத்திரர் தமிழ்நாட்டவரே என்பதற்கேனும் ஆதாரம் உண்டா? இவ்வாறு, குணபத்திரர் இருவராகவேண்டுமென்று நான் கூறுவது சிறிதும் ஆதாரமற்ற விதண்டையன்று. சென்னைராசாங்கக் கையெழுத்துப் புத்தகசாலையில் (Government Oriental Manuscript Library) "யதிதர்மம் ஸ்ரீ வகதர்மம்" என்றொரு பிரதியுள்ளது. இதில் ஜைனமதவிஷயங்களும் வரலாறுகளும் பரக்க எழுதப்பட்டுள்ளன. முழுதும் வசனநடையில் அமைந்த இக்கிரந்தம் சிறந்த பண்டிதரால் எழுதப்பட்டதாகத் தெரியவில்லையாயினும், தம் சொந்தமதவரலாறுகளை நன்கறிந்த ஜைனரொருவரால் இஃதெழுதப்பட்டதென்று நிச்சயமாய் நம்பலாம். இதில் "பண்டிதர்வயணம்" என்பதன்கீழ், குணபத்திராசாரியர் என்பவர் ஐந்நூற்றுச்சில்லறைவருஷங்கட்கு முன் கிஷ்ணுதேவராயர்காலத்தில்,* ஜைனமார்க்கத்திலே நடந்த சிலமாறுபாடுகளை நீக்கி அதைக்காத்தற்காக "பண்டிதர்களை" நியமித்தார் என்னும் விஷயங் கூறப்பட்டுள்ளது. இதனால், குணபத்திராசாரியர் என்பவரொருவர், பிற்காலத்து ராயர் நாளில் தென்னாட்டிலே விளங்கினரென்று தெரியவருதலால், இராட்டவரசனாகிய அமோகவர்ஷன் காலத்தவரொருவரை மண்டலபுருடர்

* கிருஷ்ணதேவராயர் என்பது இவ்வாறு பிறழ்ந்ததுபோலும்.

ஆசிரியராகக் கொள்ளவேண்டிய அவசியமில்லையென்றே தோற்றுகிறது.

இனி, சோதிட நூலாகிய "சூடாமணி உள்ளமுடையான்" இயற்றியவர் இம்மண்டலபுருடரே யென்பது, அந்நூற்பதிப்பிலும் வேறு சிலரெழுத்துக்களிலுங் காணப்படுகிறது. இவ்வாறு கூறியதற்குக் காரணம்:—"சூடாமணி" என்னும் விசேடணம், நிகண்டுக்கும் உள்ளமுடையானுக்கும் ஒப்ப அமைந்திருத்தலே போலும்! அவ்வுள்ளமுடையானூலாசிரியர், கடலூராரியன் திருக்கோட்டி நம்பி என்பது அந்நூலிறுதிச்செய்யுளால் நன்கறியப்படுவதை அன்னோர் பார்த்திலர். "செந்தமிழ்" முதற்றொகுதி ௩௬௬-ம் பக்கத்தும் அவ்வாசிரியர் வரலாறு காண்க.

## ௪. உரிச்சொல்.

இனிவரும் நிகண்டுகளைக் காலத்தால் ஒரு முறைபெறும்படி வைப்பதில் சிறிது இடர்ப்பாடுண்டாயினும், எல்லாவற்றுக்கும் பிந்திய ஆசிரியநிகண்டுடையார் நமக்கு ஒருவழி காட்டியுள்ளார். அந்நிகண்டுப்பாயிரத்திலே,

"முந்துள திவாகரம் பிங்கல நிகண்டுசீர்
முந்துகாங் கயனுரிச் சொல்
முறைபெறு கயாகரம் பகருமக ராதியிவை
முற்றுமொன் றாத் திரட்டி"

என, நிகண்டுகளின் வரிசை கூறப்பட்ட அடிகள் வருகின்றன. இம்முறைப்படியே, சூடாமணியை யடுத்து உரிச்சொனிகண்டைக் கூறலாம். இவ்வாறு உரிச்சொனிகண்டைப் பிற்காலத்ததென்று கொள்வதற்குச் சிறந்த காரணமொன்றும் உண்டு. வணங்கற்பொருளில் சலாஞ் செய்தல் என்னும் சொல்வழக்கம் நம் நாட்டில் வழங்கத் தொடங்கியது துருக்கராட்சிக்குப் பிந்தியகாலத்தே என்பது யாவர்க்குந் தோன்றத் தக்கது. இச்சொல்வழக்கு பிங்கலந்தை சூடாமணி நிகண்டுகளில் காணக்கிடையாதாயினும், உரிச்சொனிகண்டில்,

"வந்தனை காணல் வணங்கல் பணிதலே
தந்தலை தாழ்தல் சலாஞ்செய்தல்"

(கூ-வது செயல் பற்றிய பெயர்த்தொகுதி-பாட்டு-உ.)

என வணங்கற்பொருளில் எடுத்தாளப்படுகிறது. இதனால், இந்நிகண்டுடையார்க்குப் பழமை கூறுதல் சிறிதும் பொருந்தாமை காண்க. இதே சொல்வழக்கை, துருக்கராட்சிக்காலத்து விளங்கிய ஸ்ரீ குமரகுருபரமுனிவர், தம் மீனாக்ஷியம்மை பிள்ளைத்தமிழில் "குறவர் மகட்குச் சலாமிடற் சேக்கறு, குமரனை முத்துக் குமாரனைப் போற்றுதும்" என்னுந்தொடரில் ஆண்டனர். ஆகவே, உரிச்சொல் நிகண்டும், அம்முனிவர் காலத்தையடுத்துச் சிறிது முன்னே பின்னே இயற்றப்பட்டிருத்தல் வேண்டுமென்று கருதலே பொருத்தமாகும்.

இனி, இந்நிகண்டியற்றிய காங்கேயரைப்பற்றி விசேடமொன்றும் அறிதல் கூடவில்லை. இவர் பெயரால், இவர் கங்கவம்சத்தவராயிருக்கலாமென்று தோற்றுகிறது. "இம்முடி" என்னும் பட்டம் இவர்க்குக் கூறப்படுகிறது. இப்பட்டம், கொங்குநாட்டு வேளாள வகுப்பாராகிய "கவுண்டரில்" ஒரு பிரிவினர்க்குரிய குடிப்பெயராக இன்றும் வழங்குவதாகக்கேள்வி. இவர் நிகண்டு உ-அ - இனியவெண்பாவில் அமைந்தது.

இவ்வுரிச்சொல் நிகண்டு, சூடாமணிநிகண்டுக்கு முந்தியதென்பது, தொண்டைமண்டல சதகமுடையார் கொள்கை. இதனை:—

பண்டைநிகண்டு திவாகரம் பிங்கலம் பன்னுரிச்சொ
லெண்டிசையின்சொல்வடமொழிச்செய்யுளெல்லாமுணர்ந்தே
தண்டமிழ்கொண்டு நிகண்டு சூளாமணி தானுரைத்த
மண்டலவன் குடிகொண்டது நீடொண்டமண்டலமே.

என்பதனாற் காண்க. இப்பாடலால், மண்டலவனிகண்டுக்கு "நிகண்டு சூளாமணி" என்பது பெயரொன்று தெரிகிறது.

## ரு. கயாகர நிகண்டு.

முன் கூறிய முறைப்படி, இக்காங்கேயனுரிச்சொல்லை யடுத்து நிற்பது கயாகர நிகண்டு. இந்நூல் இனிய கட்டளைக்கலித்துறையில் அமைந்தது. இதன் சிதைந்த பிரதியொன்று இச்சங்கத்துப்

பாண்டியன் புத்தகசாலையில் உண்டு. இது கயாகரர் என்பவராற் செய்யப்பட்டதாகலின் அப்பெயர்பெற்றது. [கயாகரர்-சொற்கிருப்பிடமானவர்; கை-சொல்.] இக்கயாகரர்—தேவை எனப்படும் இராமேசுவரத்தவரென்பதும், வேதம் வல்லஅந்தணரில் காசிபகோத்திரத்தவரென்பதும், கல்வி கேள்வி மிக்கவரென்பதும், இராமீசுவரர் பேரில் கோவையொன்று பாடினவரென்பதும் இவர் நூலாலே விளங்குகின்றன. இவற்றை:—

"பேதையர் பித்தர் அறியாத பாலர்சொற் பேதங்கொள்ளார்
ஓதினுங் குற்றந் தெரியார் பெரியவ ரோங்கிடப
சேதனன் பற்று மறவாத தேவைக் கயாத ரன்றொல்
வேதியன் சொற்ற வுரிச்சொற் பனுவலு மேம்படுமே."

"நீட்டு மறைபயில் நாவினன் என்றுஞ் செழுந்தமிழ் நூல்
கேட்ட செவியினன் கேளா வறிவன் கயாதரத்துள்"

"காசிப கோத்திரம் வாழவந் தோன்தென் கலைத்தமிழ்தேர்
மாசில் பெருந்தகை மாறு வறிவன் மலரயனும்
கேசவ னும்புகழ் தேவை நன்னுடன் கயாதரம்."

"மேவு மரும்பொரு ளந்தாதி கேட்டிந்த மேதினியோர்
தாவும் வினைகெடச் சாற்றிய தென்றமிழ்த்தேவை மன்னும்
கோவை யிராமீ சுரக்கோவை சொற்ற குருபரன்மற்
றேவுத லின்றி யமைத்தான்பத் தாவ தொலியியலே."

என்பவற்றுற் காண்க. இவர்பாடியதாகத் தெரியும் இராமேசுரக்கோவை இப்பொழுது எங்குள்ளதோ தெரியவில்லை. இந்நிகண்டு முந்தியநிகண்டுச் சொற்களையே கொண்டுள்ளமையால், இதினின்று புதிய விசேடங்கள் என்பார்வையிற் பட்டில. இக்கயாகரத்தின் பெருமை, தொண்டைமண்டலத்தாராகிய ஆசிரியநிகண்டுடையார்க்கும் நன்கு தெரியவந்து அவராற் புகழப்படுதலானும், அகராதி நிகண்டுக்கும் முந்தி இதுவைத்துக்கூறப்படுதலானும் இஃது இற்றைக்கு 300-வருஷங்கட்கு முற்பட்டதென்பது திண்ணம். அகராதி நிகண்டின் காலம் பின்னர்த் தெளிபக்காட்டப்படும்.

## கூ. அகராதி நிகண்டு.

இக்கயாகரத்தையடுத்தது அகராதி நிகண்டு என்பது "முறைபெறுகயாகரம் பகருமகராதியிவை" என்னும் ஆசிரிய நிகண்டுத்

தொடரால் விளங்கும். இதன் பிரதியிரண்டு இச்சங்க புத்தகசாலையில் உள்ளன. இந்நூல், சிதம்பரமிரேவணசித்தர் என்னும் பெரியவரால் இயற்றப்பெற்றது. "இரேவணாராத்திரியர் சூத்திரவகராதி" என்று கேள்விப்படுவது இதுவேயாதல் வேண்டும். இச்சித்தர், தொண்டைநாட்டு வேளாளரென்பதும், சிதம்பரத்திலிருந்தவரென்பதும், கல்வி கேள்வி வல்லவரென்பதும், சிவஞ்ஞானியென்பதும் இந்நிகண்டால் அறியப்படுகின்றன. இவ்வகராதிநிகண்டு சகாப்தம் கருகசு-ல் (கி. பி. 1594) முடிக்கப்பெற்றது. இந்நிகண்டின் தொடக்கத்தே இவர் பாடியதாகக் காணப்பட்ட அகவலொன்று, இந்நூலின் வரலாற்றை நன்கு விளக்குதல் அடியிற் காண்க.

"உலகினர் பவமற மலமக டவஞ்செயும்
தேசு கொளும்பட் டீசுரன் பதம்பணிந்
தொலிகெழு கடல்சூ ழுலகினிற் றெரிக்கும்
இயற்சொ றிரிசொ றிசைச்சொல் வடசொலென்
றுரைதரு சொற்கள் ஒருநான் கதனிற்
றிரிசொலின் பேத மிருவகை யதுதான்
ஒருசொற் றனே பலபொரு ளாகியு
பலசொற் றனே யொருபொரு ணிலவியும்
வருமிதி லொருசொற் பலபொரு ளதனைத்
தெரிதரு பிங்கலந் திவாகர முதலாப்
பரவிய நிகண்டு பலவெடுத் தாராய்ந்து
அதிற்சில திரட்டி அகர முதலா
மதித்தெழு வகர மீறாய் மொழிமுதல்
எழுத்து நூற்றொரு நாலி னடைவே
எழுதரு சூத்திர முதற்பதந் தோறும்
வருபெய ராதிப் பொருளா வெடுத்தே
ஒருபெயர் முதனூற் பத்தா றீறு
நிகழ்தரு வுரைக்குந் தொகை.........பெயர்
அடைவினி லங்கங் கமர்ந்தள பெயரும்
இடையிடை யடைவிலங் கில்லாப் பெயரும்
மன்னுசூத் திரமு வாயிரத் துடனே
முந்நூற் றறுபத் தெட்டெனுந் தொகையா
வந்திடுந் தொதுதியீ ரைந்தென வகுத்தே
அரிய சகாத்த மாயிரத் தைஞ்நூற்

றெநபத் தாறென வுரைத்திடு மாண்டினில்
ஐந்ததி காரம் அறுபத்து நாற்கலை
உந்திய வறிவா லொருங்குட னுணர்ந்த
நாற்கவி வாணர் நகைதா யானும்
நூற்பா வதனு னுண்ணிய வுணர்வில்
ஆதர வாலக ராதி நிகண்டென
ஓதினன் யாவரு முணர்தா நினைந்தே."

இவ்விரேவணசித்தர், திருமேற்றளிப்புராணம், திருவலஞ்சுழிப் புராணம், திருப்பட்டீச்சுரப்புராணம்—என்னும் மூன்று புராணங்கள் இயற்றியவரென்பது:—

"பவமறத் தெளிந்த சிவதரி சனத்தோன்
திருமேற் றளிக்குச் செழுந்தமிழ்ப் புராணம்
தெரிதரு சிதம்பா ரேவண சித்தன்."

"வாமிகு வலஞ்சுழி வாணர்தம் புராணமும்
உரைதரு ரேவணன்."

"திருப்பட் டீச்சுரச் செந்தமிழ்ப் புராணம்
தெரிந்தநற் சிதம்பா ரேவணன்."

என்னும் அடிகளாற் கண்டுகொள்க. திருமேற்றளி யென்பது காஞ்சிப்பிரதேசத்தைச் சார்ந்தது. திருவலஞ்சுழியும் திருப்பட்டீச்சுரமும் கும்பகோணத்துக்குப்பக்கத்தேயுள்ளசிவஸ்தலங்களாம். இவையன்றி,சிவஞானதீபம் என்னும் சைவசமய கிரந்தமொன்றும் இவராற் செய்யப்பட்டதென்று தெரிகிறது. இந்நூல், சுபானுவருஷம் பதிப்பிக்கப்பட்டது.

## எ. ஆசிரிய நிகண்டு.

இனி, இந்நிகண்டுகளிலெல்லாம் பிற்பட்டது ஆசிரிய நிகண்டு. இஃது ஆசிரியவிருத்தத்தால் அமைந்தமையின் அப்பெயர் பெற்றது. இஃதியற்றியவர், தொண்டைமண்டலத்துச் செஞ்சிச் சீமையைச் சார்ந்த ஊற்றங்காலில், பாவாடை வாத்தியார் குமாரர் ஆண்டிப்புலவர் என்பார். இப்புலவர், இந்நிகண்டுடன், நன்னூற்கு ஓர் உரையும் இயற்றியவரென்று தெரிகிறது. இச்சங்கத்துப் புத்தகசாலையில் சங்கரநமச்சிவாயநுரை யல்லாத வேறோர் உரைப் பிரதியுமுண்டு;

ஆனால், அதுவே இந்நிகண்டுடையார் செய்தவுரை யென்பது துணியக்கூடவில்லை. இவர் நன்னூற்கு முரைசெய்தவரென்பனீத ஆசிரிய நிகண்டுப் பாயிரத்தில் வரும், "இயப்பிய நிகண்டினுரை யறியன் னூலினொ டிரண்டுமே செய்துவைத்தான்" என்னுந் தொடரால் அறிக. இந்நிகண்டின் முதலிரண்டுதொகுதி சில வருஷங்கட்கு முன்பு அச்சிடப்பட்டன.

இவ்வாறு வழங்கும் ஏழு நிகண்டுகளை யன்றி வேறு சில நிகண்டுகளும் இந்நாட்டில் வழங்கலாம். ஆனால், பிரசித்தமானவை மேற்காட்டிய நூல்களேயாகும். ஐந்திணை நிகண்டு என்பதொன்றுள்ளதாகக் கேள்விப்பட்டதுண்டு. இந்நிகண்டுகளெல்லாம் பெரும்பான்மை வழக்கு வீழ்ந்தனவாயினும், தமிழ்க்குப்பெரிதும் அலங்காரந்தருவனவாதலின் அவற்றின் வரலாறுகளை எழுதத்துணிந்தேன். என்னெழுத்திலடங்காத செய்திகள் பல இவற்றைக்குறித்திருத்தல் கூடும். அவையெல்லாம் அறிந்தார்வாய்க் கேட்டு மகிழ்ந்துகொள்க.

பத்திராசிரியர்.

---

# இந்துசாகபக்ஷகளுயிருப்பதேன்?

(தொடர்ச்சி.)

விலங்கினத்தில் மாமிசபக்ஷணிகள், சாகபக்ஷணிகளினும் அதிக அலைப்புள்ளவைகளா யிருப்பதுபோல், மனிதர்களுள்ளும், காய்கறியுணவினரைவிடப் புலாலுணவினர்கள் அதிக அலைப்புள்ளவர்களாகவும், தன்வசமானவர்களாகவுமிருக்கக் காண்கிறோம். சாந்தமும் சமமும் சுவாதீனமு (அல்லது தன்னடக்கம்) முள்ள குணமே, ஆத்துமலக்ஷண அறிவிருப்பதற்கு முகற்குறியாதலால், அவ்வறிவிருத்திக்குப்புலாலுணவு சிறிதேனும் உதவியாகாதென்பது திண்ணம். இறைச்சி தின்பவர்கள் ஒரு விஷயத்திலும் மனதை யொருமுகப்படுத்த முடியாமற் போவதற்கு இதுதான் காரணம். தமது ஆத்துமலக்ஷணம் தெய்வலக்ஷணமிவைகளைக்குறித்துத் தியானஞ்செய்ய அவர்களால் முடியாது. ஆத்துமலக்ஷண இரகசியத்தை யறிந்துள்ள ஆரியர்கள்

இதனாற்றான் இறைச்சி புணவு உதவாதென்கிறார்கள். ஆத்துமலக்ஷணஞானம் முற்றப்பெறுவதற்குத் தமது வாழ்வையும் மனதையுஞ்செலுத்துமாரியர்களேயோகிகளெனப்படுவார்கள். ஆத்துமலக்ஷணஞானம் பெருகுவதற்குக் கொல்லாவிரதம் வேண்டுமென்பதும், உணவின்பொருட்டேனும் சுகத்தின்பொருட்டேனும் பிராணிவதை செய்வது ஆத்துமலக்ஷணஞானத்திற்கோர் பெரிய இடறுகட்டையென்பதும் அவர்கள் கோட்பாடு. இதுவுமன்றி, பிராணிவதைசெய்வதையும் அல்லது பிராணி இம்சை செய்வதையும் மூன்று வகுப்பாகப்பிரித்திருக்கின்றார்கள். அவைகள்:—"செய்தல்" "செய்வித்தல்" "சம்மதித்தல்" என்பவைகளாம். அதாவது, ஒரு பிராணியை நானே வதைக்கலாம். யோகிகளது கொள்கைப்படி நான் செய்தவனாகிறேன். இரண்டாவது, வேறொருவனைக்கொண்டு செய்விக்கலாம். மூன்றாவது, கசாப்புக்கடைக்காரனிடமிருந்து வாங்கும்பொழுது, அவன் செய்வதற்கு நான் சம்மதித்தவனாகிறேன். வதைகூடாதென்பவன் வதைக்கக்கூடாதென்றும், வேறொருவனைக்கொண்டு செய்விக்கக்கூடாதென்றும், வேறொருவன் செய்வதற்கும் சம்மதிக்கக்கூடாதென்றும் அவ்யோகிகளது மதம். யோகியொருவன் வதைக்கவும் கூடாது, இம்சிக்கவுங்கூடாது என ஏற்பட்டால், அவனை யெவனும் இம்சியான்; புலிபாம்புகளும் இம்சியா. புலி பாம்புகளை இம்சிக்கவேண்டுமென்ற எண்ணம் நமக்குண்டாவதால், நம்மை அவைகள் இம்சிக்கின்றன. இந்தியாவில் இந்த உத்தமதருமத்தைச் சிறிதுங் குறைவின்றி அவ்யோகிகள் பரிபாலனஞ்செய்து, திரியக்கு ஜந்துக்களிடமும். அதைச்செலுத்திவர, அஃதெங்கும் விலக்கிலாப்பொது விதியாயிற்று. யோகிகளது சந்நிதியில் கொடியவிலங்கு முதலிய ஜந்துக்களும் சாந்தமாயடங்கி, அவர்களுக்குப் பணிவிடையுஞ் செய்கின்றன. ஆண்பாலர் பெண்பாலரிருவருள்ளும் பூர்வகாலத்திருந்த மகான்களது இந்நிலைமையைப் பதுமைகளிலும் படங்களிலுங்காணலாம். யோகிகளுக்கு யோகியான சிவபெருமான் கழுத்திலும் சிரசிலும் உடம்பிலும் விஷப்பாம்புகளை ஆபரணமாக அணிந்திருக்கிறார். பெண்யோகியாகிய துர்க்காதேவி கொடிய புலிசிங்கங்களது முதுகில் வீற்றிருக்கிறாள். அவ்வித யோகிகளுக்கு உண்மையில் சத்துருக்கள் கிடையார்.

ஆத்தும லக்ஷண அறிவு முதிர்ந்த ஓர் ஆரியன் இறைச்சியை வெறுப்பதற்கு மற்றோர் காரணமென்னவெனின், மாமிசவுணவும் மதுவுணவும் ஒன்றைவிட்டொன்று பிரியாதவை. இறைச்சி உணவைச் சீரணிக்கச்செய்வதற்குச் சாராய முதலிய லாகிரித்திராவகங்கள் வேண்டுதலால், அநேகர்களுக்குக் குடிப்பழக்கமுண்டாகி விடுகிறது. குடியால் வேறுபலவிதத் துர்க்குணங்களுண்டாவதால், மரக்கறியுண்ணுவதில் இவ்விதத்துர்க்குணமெல்லாம் அணுகா; இலகுவாய் விலகுமென்பது ஆரியரது கொள்கை. இந்துக்களுக்குச் சாராய முதலிய இலாகிரிப்பண்டங்களிடத்தும் வெறுப்பு. மேற்குல ஆரியனொருவன் பலரறியக்குடிக்கப்போவானேல், அல்லது பலரறியக்குடிப்பனேல் அவன் ஜாதிப்பிரஷ்டனாவான். ஆரியஸ்திரீகள் சாராயத்தைக் கையாற்கூடத் தீண்டுவதில்லை. மேனாட்டு நகரத்தெருக்களில் குடிவெறிகொண்ட மகளிரைக்காணக்கூடியது போல, இந்துப்பெண்களுள் ஒருவரையேனுங் காண்பதரிது. பெருநகரங்களிற் பஹிரங்க மதுபானசாலையுதவாதென்று இந்துக்கள் விதித்தார்கள். ஆங்கிலேய அரசாங்கச் சாராயவியாபாரத்தின் இழிந்த வாசனையால், சிலநகர்களில் அநேகம் சாராயக்கடைகள் இப்பொழுது இருக்கின்றன. சாராயவியாபாரமும், அபின் வியாபாரமும் சரியென்று ஒருநாகரிகமுற்றசாதியார் எவ்வாறொப்புவதென இந்துக்களுக்குத் தெரியவில்லை. கிராமங்கள் தோறும் சாராயக்கடைகளுண்டாக்கிச் சொற்பவிலைக்குச்சாராயம் விற்று, கூலிவேலைக்குக் கையாலுழைத்துப்பாடுபடும் ஏழைஜனங்களுக்குக் குடிப்பழக்க முண்டாக்குவதும், தெள்ளறிவுடையோரை விலங்கினர்களாகச்செய்வதும் எப்படியென்பதும் அவர்களுக்குத்தெரியவில்லை. ஆங்கிலேய அரசாட்சி வந்ததன்பின், இந்துக்கள் நல்லொழுக்கத்திலுயர்ந்தனரா? என்று அநேகர் என்னையடிக்கடி கேட்கிறார்கள். இந்தியாவில் நடக்கும் சாராயவியாபாரம் அபின்வியாபாரம் இவைகளாலாகும் இழிபயனின்னதென அவர்கள் அறிந்திருப்பரேல், கிறிஸ்துமதப்போதகர்கள் செல்லுமிடமெல்லாம் சாராயக்குப்பியும் பிராந்திக்குப்பியும் அவர்களைவிட்டுப் பிரியாது செல்வதையும் அவர்கள் அறிந்திருப்பரேல், இக்கேள்விகள் கேட்கமாட்டார்கள். மரக்கறியுண்ணுமோர் இந்து, மருந்தாகவேனுங்கூட, சாராயத்தைத் தீண்டான்.

இவையெல்லாவற்றிற்கும் மேலாக ஆரியர்கள் சாகபட்சகராயிருப்பதற்குப் பிரேமை (அல்லது அன்பு) யுங்காரணம். பிரேமையென்றால் எல்லாமொன்றென் றுணர்த்துவதாகும்: எல்லாமொன்றென்ற காரணத்தாலேயே இந்துக்கள் தாழ்ந்த பிராணிகளிடமும் பிரேமையாயிருக்கிறார்கள்.

எல்லாவுயிர்களும் ஒரு பரம்பொருளின் பலவகைத்தோற்றமென்ற அறிவு அனுபவத்திற்கு வரவேண்டுமென்பதே அவர்கள் கருத்து. நம்முள் அந்தரியாமியாயிருந்து ஞானவொளியால் அஞ்ஞான இருள்கற்றும் அந்தப்பரமாத்மாவே, திரியக்கு ஜந்துக்களுள்ளும் அந்தரியாமியாயிருக்கிறார். "சகோதரபாவம்." என்ற வார்த்தைபோல், அவர்கள் கொண்டுள்ள அபிப்பிராயம், தெளிவற்ற பொருளற்ற வெற்றுவார்த்தையல்ல. தாழ்ந்த பிராணிகளும், எந்த உயிருடைஜந்துவும் நாமும் ஒரேஜீவஸ்வரூபங்களென்று அனுபவத்திலறியவேண்டுமென்பது அவர்களது அபிப்பிராயம். எல்லாவற்றுள்ளும் ஒரே ஜீவனியங்குவதால், "எவ்வுயிரையுந் தன்னுயிர்போற்கருதி நேசி" என்பது அவர்கள் மதம். [ஆத்மவத் ஸர்வபூதாநி யப்பஸ்யதி ஸபஸ்யதி] "உன்னுளுள்ள ஜீவாத்மாவை அறி: பிறகு, எங்கும் அதே ஜீவன் இயங்குவதையறிவாய். எங்கும்விளங்குவது ஒரே ஜீவசொரூபமென அனுபவித்தறியும்பொருவன் ஒரு ஜீவனைப் மற்றொன்றைக் கொல்வது முடியாது." அவனுக்கு அகங்காரமில்லை. எவருக்கும் உதவிபுரியச் சந்நத்தனாயிருப்பன். உணவின் பொருட்டேனும் சுகத்தின்பொருட்டேனும் ஜீவவதை செய்பவன் அகங்காரியாவான். மற்றப் பிராணிகளது உரிமையை மறப்பதற்கும், தீங்கற்ற அவைகளைக்கொன்றோ; இம்சித்தோ; அல்லது அவ்வுரிமையைப்போக்கியோ நம்மைவளர்க்கவும்-அம்மட்டுமோ - வேடிக்கைபார்க்கவும்வழி தேடுவதற்கும் இந்த அகங்காரந்தான் காரணம். இவ்வகையகங்காரமே துர்எண்ணங்களுக்கும், துர்நடத்தைகளுக்கும் பிறப்பிடம். எதனால் நாம் அகங்காரிகளாவோமோ, விஷயவாசனைகளில் எதனால் நமக்காசையுண்டாகின்றதோ அவையெல்லாம் இழிந்தவைகள்; கெட்டவைகள். அகங்காரத்தை விடுவதற்கு நமக்கு வழிகாட்டிகளாவையோ, அவையெல்லாம் மேம்பாடுடையவைகள்; நல்லவைகள்.

ஜீவனென்றென்பதை நாமறிய முடியாமல் எது செய்கின்றதோ, அது பிசகு (தவறு); நமக்கு ஆத்துமலக்ஷணஞானமுண்டாக்கித், திரியக்கு ஜந்துக்களது மூலமாகவும் ஜீவன் பிரகாசிக்கின்றதென்பதை நமக்குணர்த்தி, நம்மைப்போலவே அவைகளிடத்தும் அன்பையுண்டாக்குவதெதுவோ அதுவே தெய்வத்தன்மையானது.

நாமுட்கொள்ளும் எந்த ஆகாரமும் மனதுசரீரமிரண்டிலும் மாறுதல்களுண்டாக்குகின்றது. புலாலுணவால் வரும் மனஅலைப்பை ஊன்றிக் கவனிப்பவர்கள், சித்தசுவாதீனமுண்டாகவேண்டுமெனப் பாடுபடுபவர்கள்—இவர்கள், அப்புலாலுணவை விடாதவரையில், காமம், குரோதம், மனச்சஞ்சலம் இவைகளைப்போக்குவது அரிது என அறிவார்கள். சாகபட்சணம் பண்ணுவது எதற்கு எனப் பலவகையிலுமாராயின், ஆரியன் சாகபட்சகனாகான்; புலாலுண்பது சரியெனவுஞ் சொல்லான்.

(முற்றும்.)

ம. ஜெகதீச ஐயர்.

---

# நல்லொழுக்கம்.

(அக-ம் பக்கத் தொடர்ச்சி.)

(ஸ்ரீ: இலக்குமணப்போற்றிகள் மொழிபெயர்த்தது.)

ஒரு யோக்கியமான இஷ்டனுடைய பொருத்தமும் சமயோசிதமுமான குறிப்புமொழிகளாலும், பக்ஷமான போதனையாலும், ஓர் இளைஞன் முற்றிலும் புதிய நடையில் திரும்பலாகும். எவ்வாறெனின், இந்தியன் மிஷனெரியாகிய ஹென்ரிமார்ட்டின் என்பவர் பையனாயிருக்கும்போது டிர்ரோ கிராமபாடசாலையில் நேர்ந்த ஓர் இஷ்டனால் விசேஷமாய் ஒழுக்கம் சீர்பெற்றவராகத் தெரிகிறது. மார்ட்டினுக்குச் சரீர துர்ப்பலமும் நொய்யதொரு கோழைமனோசுபாவமும் உண்டு. மனோதைரியமின்மையால் பள்ளிக்கூடத்து விளையாட்டில் அவருக்குப் பிரியம் இல்லை. அவர் கொஞ்சம் கர்வமுள்ளவராதலால் பெரிய பையன்கள் அவரைக்கோபமூட்டியும், சிலர் அவரை உரக்க அதட்டியும் இன்புறுவாராயினர். ஆகிலும் அந்தப்பெரிய

பையன்களிலொருவன் மார்ட்டினுடன் சிநேகம் கொண்டாடி, அவரைத் தன்னுடைய பாதுகாப்பில் வைத்துக்கொண்டு அவரைத் துன்பப்படுத்துவோரை விலக்கி அவருக்காக மற்றப்பையன்களுடன் போராடினது மட்டுமன்று; அவருக்குப் பாடங்களிலும் உதவிசெய்தான். மார்ட்டின் கொஞ்சம் மந்தமுள்ள மாணவராயினும் அவருடைய தகப்பனுருக்கு, அவர் உயர்தரக்கல்விச்சாலையில் படிப்பதால் பெறும்பலனை யடையும் படியான விருப்பமிருந்தது. உத்தேசம் பதினைந்தாவது வயதில், கார்ப்பஸ், ஸ்காலர்ஷிப் என்ற மாணவர் பரிசிற்கு முயற்சிக்கும்படி அவரை ஆக்ஸ்போர்டுக்கு அனுப்பினுர் அதில் அவர் தவறினுர். பின்னும் இரண்டுவருஷம் டேர்ரோ கல்விச்சாலையில் வாசித்து அப்பால் கேம்பிரிட்ஜிக்குப்போயினர். அங்கே ஸெண்ட.ஜான்ஸ் காலேஜில் பதியப்பெற்ருர். அதற்குமுன்னமே மாணுக்கனை அவ்விடம் வசித்திருக்கக்கண்டது யாரை? இவருக்கு டேர்ரோகிராமபாடசாலையில் முன்பு உபகாரம் செய்திருந்த அவனையேயாம். அவர்களுடைய சினேகமானது புதுப்பிக்கப்பட்டது. அக்காலமுதல் அந்தப் பெரியபையன் அந்த இளைஞருக்குச் சட்டம்பிள்ளையாக நடந்துகொண்டான். மார்ட்டின் ஆனவர் தம்முடைய படிப்புகளில் புத்தி சலனமுள்ளவராயும், முற்கோபியாயும் கர்வமுள்ளவராயும் இடைக்கிடை அடக்கமுடியாத மனஎழுச்சிக்கு உட்பட்டவராயும் இருந்தார். அவருடைய பெரிய சிநேகிதனே உறுதியும், பொறுமையும், கடினமுயற்சியும் உடையவனுயிருந்தான். அவன் கோபமூளத்தக்க தோழமாணுக்கரை எப்பொழுதும்மேற்பார்க்கிறதிலும் நடத்துகிறதிலும், அவருக்கு நற்புத்தி சொல்வதிலும் ஒருக்காலும் பின்வாங்கினதில்லை. அவன் மார்ட்டின் என்பவரைக் கெட்ட இனத்தாரின் மார்க்கத்தினின்றுப் பாதுகாத்து, மனிதர்களுடைய புகழ்ச்சிக்காக அன்று; தெய்வமகிமைக்காகக் கடினமாய் வேலைசெய்யும்படி அவருக்குப் போதனைசெய்தான். இவ்வாறு அவருடைய படிப்புகளில் அவருக்குத்தப்பாமல் உதவிசெய்ததினுல் பின்வரும் கிறிஸ்துமஸ் பரீட்சையில் அவ்வருடம் அவர் முதற் பையனுயிருந்தார். ஆயினும் மார்ட்டின் என்பவருடைய பட்சமான இஷ்டனும் சட்டம்பிள்ளையுமான அவன் தனக்குயாதொரு கௌரவத்தையும் உண்டாக்கிக்கொள்ளவில்லை. அவன் வெளிப்பிரஸ்தாபத்திலில்லாவி

டினும், அனேகமாய் பரோபகாரமுள்ளவனாக வாழ்ந்து வந்தான். அவனுடைய மிகுந்த விருப்பம் யாதெனின், தன்னுடைய இஷ்டருக்கு நல்லொழுக்கத்தை உண்டாக்கவும், அவருடைய மனதில் உண்மையின் விருப்பத்தை உண்டாக்கவும், அவர் கொஞ்சக்காலத்திற்குப்பின் வஹித்துக்கொண்ட மேன்மையான இந்தியன் மிஷனரிஸ்தானத்துக்கு அவரைத்தகுதியாக்கவுமாக இருந்திருக்கின்றது.

டாக்டர் பெய்லி என்பவர் சர்வகலாசாலையில் கற்கும்போதும், இவ்வாறான ஒரு சமாசாரம் உண்டென்று சொல்லப்படுகிறது. காம்பிரிட்ஜின் கிறிஸ்து காலேஜ் என்னும் கல்விச்சாலையில்அவர் மாணாக்கராயிருக்கும் போது கூர்மையான புத்தியுடன் நாகரீகமின்மைக்கும் பேர்போனவராயிருந்தார். தவிரவும் தன் கூட்டாளிகளுக்குப்பிரியமுள்ளவராயும் அவர்களுடைய கவனத்திற்குப் பாத்திரராயுமிருந்தனர். அவருக்கு இயற்கையில் சாமர்த்தியங்கள் மிகுந்திருப்பினும், அசிரத்தையும், சோம்பலும்,வீண்செலவும் உடையவராயிருந்தனர். அவர் மூன்றாவது வருஷத்தொடக்கத்தில் உத்தேசத்திற்கு மிகவும் குறைந்த தேர்ச்சியுள்ளவராயிருந்தனர். அவர் வழக்கமாய்த்துன்மார்க்கத்தில் வியர்த்தமாக்கிய ஓர் இரவின்மறுகாலையில் அவருடைய படுக்கையின் பக்கலில் ஓர் இஷ்டன் நின்று கொண்டு "பெய்லியென்பவரே! உம்முடையநிமித்தம் யோசித்துப்பார்த்ததால் தூக்கம்பிடியாமல் இருக்கிறேன். உம்முடைய மூடத்தனத்தைப்பற்றி நினைத்துக் கொண்டிருக்கிறேன். செலவு செய்வதற்கு என்னிடம் வகையுண்டு. நான் சோம்பேறியாகவும் இருக்கலாகும். நீரோ, எளை. நீர் அவ்வாறு இருக்கமுடியாது. ஒருக்கால் நான் முயற்சி செய்தபோதிலும் என்னால் ஒன்றும் செய்ய முடியாது. எவற்றையும் செய்வதற்கு நீர் தகுதியுள்ளவராயிருக்கிறீர். இராத்திரிமுழுதும் உம்முடைய குற்றத்தை நினைந்துகொண்டே தூங்காமலிருந்திருக்கிறேன். சிரத்தையுடன் உம்மை எச்சரிப்பதற்கு இப்பொழுது வந்திருக்கிறேன். உள்ளபடியே உமது சோம்பலை நீர் விடாது பற்றி இவ்வாறே நடக்கிறதானால் முற்றிலும் உம்முடைய சாவகாசத்தை நான் விட்டுவிடவேண்டும்" என்று சொன்னான்.

இந்த எச்சரிக்கையானது மிகவும் பலமாய் அவரிடத்தில் அழுந்தினதால் அந்த நிமிஷமுதல் வேறான மனிதனாயினர். முற்றிலும்

புதிய ஒழுங்கு ஏற்படுத்திக்கொண்டு அதனை ஜாக்கிரதையுடன் விடாது பற்றிவந்தனர். அவர் மிகவும் சுறுசுறுப்பான வித்யார்த்தியாய் விட்டனர். தன்னுடன் எதிர்த்த பையன்களையெல்லாம் ஒவ்வொருவராய்க்கடந்து அந்தவருஷாந்தத்தில் சினியர் ரேங்கினர் என்னும் ஸ்தானத்தை வகித்தனர். அப்பால், அவர் கிரந்தகர்த்தராயும் வைதிக சாஸ்திரியாகவுமானது எல்லாருக்கும் போதுமானபடி தெரிந்த விஷயமே.

இளைஞருக்கு நிதர்சனமாக நேரில் நடந்து காட்டுவதின் முழுப்பயனை உணர்ந்தவர், டாக்டர் ஆர்னல்ட் என்பவரைவிட வேறொருவருமில்லை. அவர், தம் கல்விச் சாலையின் ஒழுக்கத்தை உயர்த்த முயற்சித்த வேலைக்குரிய பெரியவஸ்துகருவியானது, நிதர்சனமாயிருந்தது. முதலில் பிரதானமான பையன்களுடையநன்மையும் மேன்மையுமான எண்ணங்களைக் கிரஹித்து, அவர்களிடம் சரியான கருத்தை உண்டாக்கவும், அப்பால் அவர்களைக் கொண்டே, அதேகருத்தை, கண்ட-பாவனை, நிதர்சனம், வியப்புகளால் மற்றப்பையன்களிடத்தும் வியாபிக்கும்படிசெய்விக்கவும் அவருடைய முக்கிய நோக்கமிருந்தது. அவ்விடத்தை நல்லொழுக்கத்தில் நிறுத்துவதற்கான யோக்கியப்பொறுப்பில், தம்முடன் அவர்கள் எல்லாரும் கூட்டுமைப்பாளிகளும், பங்காளிகளுமாகின்றனர் என்பதை அவர்கள் எல்லாரும் உணரும்படி செய்ய முயற்சித்தார். இவ்விதம் பெருந்தன்மையாய் நடத்தினதின் முதற்பயன் பையன்களுக்குப்பலத்தையும், தன்மரியாதையையும் உண்டாக்கியது. அவர்கள் தங்களை நம்புதற் பாத்திரராக உணர்ந்தனர். ஆகிலும் எல்லாக் கல்விச்சாலைகளிலுமுள்ளவாறே ரக்பியிலும் வினைப்பையன்கள் இருந்தனர். இவர்களைக்கவனித்து ஒருவருடைய துர்வழக்கம் மற்றவர்களைத் தொடாதபடி தடுக்கவேண்டுவது உபாத்தியாயருடைய கடமையாயிருந்தது. "அந்த இரண்டுபையன்களும் ஒன்றாய் நடப்பதை நீர் பார்க்கிறீரா? இதன்முன் ஒருக்காலும் அவ்விருவரையும் ஒன்றாக நான் பார்த்ததில்லை. அவர்கள் கூடுகிற இனத்தைக் கவனிப்பது முக்கியமான விஷயமாக நீர்வைத்துக்கொள்ளவேண்டும். ஒருபையனுடைய ஒழுக்கத்தில் விசேடமாறுதலை உண்டாக்குவது அதைவிட வேறொன்றுமில்லை." என்று ஒருகாலத்தில் அவர் தன் கீழ் உபாத்தியாயருக்குச் சொன்னார்.

ஒவ்வொரு பெரிய உபதேசிகளுடையதைப்போல, டாக்டர் ஆர்னல்ட் உடைய சொந்த நிதர்சனமானது, ஓர் ஆவியின் பிரவேசம் போல இருந்தது. அவருடைய முன்னிலையில் இளைஞர்கள் தங்களைத் தாமே கண்ணியப்படுத்திக்கொள்ளப் பழகினர். தன்-மரியாதை காரணமாக மக்கட்குரிய சன்மார்க்கங்கள் வளர்ந்தேறின. அவரைப்பார்த்த மாத்திரமே, அவர்களுக்குள் புதுமையான சௌக்கிய களஞ்சியமும் பலமும் உண்டானதுபோலவும், அவரைவிட்டுப் பிரிந்த பின்னரும் வெகுகாலம் அவர்களுடனிருந்த சிரத்தையையும் கௌரவத்தையும் அவர்களுடைய ஆன்மாவுக்குக் கொடுத்ததுபோலவும் இருந்தது. அவருடைய ஸ்வரூபமானது அவர்களுடைய எண்ணங்களில் வழக்கமாய் உயிர்த்திருந்ததால், அவர் இறந்தபிற்பாடும் அவருக்கும் அவர்களுக்குமிருந்த பற்றானது விட்டொழியவில்லை அவரது வாழ்க்கையும் அவருடன் கூடிய இணக்கமும் தோஷரஹிதமாயிருந்தமைபற்றி அவ்விருதிறத்தினருள்ளும் பிரிவு என்னும் உணர்ச்சியே ஒழிந்துபோயிற்றென்னலாம். இவ்வாறாக டாக்டர் ஆர்னல்ட் என்பவர் அனேகரைப் புருஷத்தன்மையும் மேன்மையுமுள்ள ஒழுக்கமுள்ளவர்களாகப் பழக்கினர். அவர்கள் உலகத்திலுள்ள எல்லாவிடங்களிலும் அவருடைய நிதர்சனத்தின்பயனைப் பரவச்செய்தனர்.

டியூகால்டு - ஸ்டியூவார்ட்டைப்பற்றியும் அவ்வாறே சொல்லப்படுகிறது. சன்மார்க்க விருப்பத்தை அவர் மாணாக்கருடைய சந்ததி முழுவதிலும் உயிர்ப்பித்தனர். "அவருடைய பிரசங்கங்கள் எனக்கு சொர்க்கத்தைத் திறந்தாற்போலிருந்தன. எனக்கு ஆன்மா உண்டென்னும் உணர்ச்சி உண்டாயிற்று. மகிமை பெற்றவாக்கியங்களிற் புலப்பட்ட அவருடைய கௌரவமான கருத்துகள் மேலுலகத்திற்கு என்னை உயர்த்தின. என்னுடைய சுபாவமுழுவதையும் மாற்றிவிட்டன" என்று லார்ட் காக்பர்ன் என்பவர் சொல்லுகிறார்.

ஒழுக்கமானது சகல முயற்சிகளிலும் பயன்கொடுக்கின்றது. தொழிற்சாலையிலுள்ள ஒரு மனிதன் நல்லொழுக்கமுடையனேல் அவன்கூட வேலைசெய்பவர்களுக்கும் தன்யோக்கியதையைக்கொடுத்து அவர்களுடைய இச்சைகள் அனைத்தையும் பெருந்தன்மைப்

படுத்துவான். இவ்வாறு 'பிராங்கிலின்' என்பவர் லண்டனில் ஒரு தொழிலாளியாயிருக்கையில் ஒரு தொழிற்கூடம் முழுவதையும் ஒழுக்கத்தில் சீர்திருத்தியதாகச் சொல்லப்படுகிறது. அவ்வாறே கெட்ட ஒழுக்கமும் இழிவான குணமுமுடையோன் தன்னறியாமலே தன் கூட்டாளிகளைத் தாழ்த்தி இழிவுபடுத்துவான். ஒரு புதிய தேசத்திற் குடியேறுவோனுக்கு நம்பிக்கைக்குப்பாத்திரமான ஒரு நல்ல மனிதனை அவன் யோக்கியதையில்லாத நூறு, அதுமட்டோ, ஆயிரம் மனிதருக்குச் சமானமாகின்றனன்." என்று காப்டென் ஜான்பிரௌண் என்பவர், எமர்ஸனிடம் ஒரு சமயம் சொல்வாராயினர். அவனுடைய நிதர்சனமானது, மற்றவர்கள் நேரில் அவனாற் பயனடையும்படி மிகவும் வியாபகத்தைப் பெறுகின்றது. அவன் தன்னுடைய மனவூக்கமான சுறுசுறுப்புள்ள நிலைமைக்கு அவர்களைத் தன்னறியாமலே கௌரவப்படுத்தி உயர்த்துகிறான்.

நல்லவர்களுடன் சம்பாஷித்தலானது நிச்சயமாய் நன்மைவிளைக்கின்றது. நல்லொழுக்கமானது வியாபகசக்தியை விசேஷமாக உடையது. "ரோஜாப்புஷ்பம் என்னிடம் பயிரிடப்படும்வரை நான் சாதாரணமான களிமண்ணாயிருந்தேன்" என்று கீழ்நாட்டுக்கதையில் ஒரு வாசனையுள்ள பூமி சொல்லுகின்றது. இனம் இனத்தை உண்டாக்குகின்றது. நன்மை நன்மையை உண்டாக்குகின்றது. நன்மையானது எவ்வளவு நன்மையை உண்டாக்குகிறதென்று ஆச்சரியப்படத்தக்கதாகிறது. நன்மையானாலும், தீமையானாலும் தனித்திருப்பதில்லை. அவை முறையே தன்னை அடுத்த மற்றவரை நன்மை அல்லது தீமையுடையவராக்குகின்றன. அவர்கள், தங்களையடுத்த மற்றவர்களை இவ்வாறே மென்மேலுமாக்குகின்றனர். எவ்வாறெனின், ஒரு குளத்திற்போட்ட கல்லானது ஒரு வட்டம் போடுகின்றது. அது, அதற்கடுத்த, அதிக விசாலமான வட்டம்; அப்பால், அது அதற்கடுத்த வட்டம்; இவ்வாறே கடைசிவட்டம் கரைசேருகிறபரியந்தம் நடக்கிறது. உலகத்திலுள்ள வறக்குறைய சகலநன்மைகளும் வெகுகாலத்தின் முன்னரே தொடங்கி இவ்வாறே நமக்குகர்ணபரம்பரையாக வந்திருக்கின்றன. அனேகம் இன்னநல்ல இடத்திலிருந்து வந்ததென்பது தெரியாது என்று கேனன் மோஸ்லி என்பவர்

சொல்லுகிறார். "அவ்வாறே தீமையிலிருந்து உண்டானது தீமையே கொடுக்கின்றது. பலம், கண்யதை இவற்றிலிருந்து உண்டாயது பலத்தையும் கண்யதையுமே கற்பிக்கின்றது" என்று ரஸ்கின் என்பவர் சொல்லுகின்றனர்.

ஆகையால் ஒவ்வொரு மனிதனுடைய ஒழுக்கமும் மற்றவர்களுக்கு நல்ல அல்லது தீய நிதர்சனத்தைத் தினமும் உபதேசிக்கின்றது. ஒரு நல்ல மனிதனுடைய நடத்தையானது, சன்மார்க்கத்தை வெகு தெளிவாய்ப் போதிக்கின்றது. துன்மார்க்கத்தை மிக உக்கிரமாய்க்கண்டிக்கின்றது. டாக்டர் ஹூக்கர் என்பவர் தனக்குப்பழக்கமான ஒரு பக்தியுள்ள குருக்களின் நடத்தையானது பிரத்தியக்ஷமான வாக்கின்சக்தி என்றும் தெய்வஞானம் இல்லாதவருக்குங்கூட நற்குணத்தின் நன்மையைப் போதித்ததென்றும் சொன்னார். "ஒரு குருக்களின் நன்னடக்கையானது, அதைப்பார்ப்பவரனைவரையும் மரியாதை செய்யவும், அன்பு செய்யவும், குறைந்த பக்ஷம் அக்குருக்களைப்போல நடப்பதற்கு இச்சிக்கவுமாவது உட்படுத்துவதற்கு மிகவும் சக்தியுள்ளபோதனையாயிருப்பதால், எல்லாரையும்விட நான் நன்றாய் நடப்பது நிச்சயம்." என்று தன்மடாதீனத்தின் வேலையை ஒப்புக்கொள்ளும்பொழுது நல்லவரான ஜார்ஜ்ஹொர்பர்ட் என்பவர் சொன்னார். "விதியைவிட நல்ல அனுஷ்டானமானது அதிக அவசியமாய் வேண்டிய காலத்தில் நாம் வசிக்கிறதாக எனக்குத்தெரிகிறபடியால் இதை நான் செய்வேன்" என்றும் சொன்னார். அதே குருக்கள் ஒரு எளிய மனிதனிடம் பக்ஷமாய் நடந்துகொண்டதானது அவருடைய உத்யோகத்தின் கௌரவத்திற்குக் குறைவென்று நிந்திக்கப்பட்டபொழுது, அவ்வாறு செய்த செய்கையின் நினைப்பானது, நடுஇராத்திரியின் கானத்துக்குநிகர் என்று அவர் வெகு அழகாகச் சொன்னார். ஜார்ஜ் ஹொர்பர்ட் என்பவர் வைதீககாலக்ஷேபத்தைப்பற்றி ஆன்ட்ரூஸ் பிஷப்புக்கு எழுதியகடிதத்தை, ஆன்ட்ரூஸ் தன் மார்பினிடம் வைத்துக்கொண்டு தன்னுடைய மாணாக்கர்களுக்குக் காண்பித்தபிற்பாடு, தான் முதலில் வைத்த இடத்திலேயே எப்போதும் திரும்பவைத்துத் தன்வாழ்நாள் முடிவுவரை தன் இருதயத்திற்கு அருகே அவ்வாறு செய்துவந்ததாக ஐஸேக்வால்டன் எடுத்துப்பேசுகிறார்.

வசப்படுத்தி ஆளும் சக்தியானது நற்குணத்திற்கு விசேஷமாய் உண்டு. நற்குணம் தங்கப்பெற்றமனிதன் மனிதர்களுக்கு உண்மையான அரசனாகிறான். எல்லாருடைய மனதையும் தன்வயப்படுத்துகிறான். ஜெனரல் நிக்கல்ஸன் என்பவர் டெல்கிக்கு முன்பு மரணப்படுக்கையில் காயப்பட்டுக்கிடக்கையில், தனக்குச்சமானமான மேன்மையும் வீரமுமுள்ள இஷ்டனாகிய, ஸர் ஹெர்பர்ட் எட்வார்ட்ஸுக்குச் சொல்லிவிட்ட கடைசிச்சமாசாரம் வருமாறு:—"நான் அவர் கூடவேவசித்து வந்திருந்தாலும், எங்களுடைய கனத்த இராஜாங்க வேலைகள் அவரை அந்தரங்கமாய் மிகுதியும் வந்துபார்ப்பதைத் தடுத்திராவிட்டாலும், அதிக நல்ல மனிதனாயிருந்திருப்பேனென்று அவருக்குச்சொல்லு; அவருடனும், அவர் மனைவியுடனும் வெகு சொற்பகாலம் வசித்திருந்தபோதிலும் எப்போதும் அதிக நலம்பெற்றவனாகவேயிருந்தேன்; அவரிருவருக்கும் என்னுடைய அன்பைச் செலுத்து" என்பதாம்.

சில மனிதருடைய முன்னிலையில், உச்சுவாசம் செய்யப்படுகிற தென் மலைக்காற்றுப்போல அல்லது உஷ்ணகாலத்தில் ஸ்நானம் செய்வதுபோல, இளைப்பாறுதலையும் பலத்தையும் கொடுக்கிற ஆன்மஞானவர்த்தனையைச் சுவாசித்தாற்போல் உணர்கின்றோம். ஸர் தாமஸ் மூர் என்பவருடைய சாந்தமான இயல்பின் சக்தியானது, கெட்டவர்களை அடக்குவதோடு நல்லவர்களுக்கு ஊக்கத்தைக்கொடுக்கும்படியான அவ்வளவு பெரியதாயிருந்தது. லார்ட் புரூக் என்பவர் அவருடைய காலஞ்சென்ற இஷ்டராகிய ஸர் பிலிப் ஸிட்னியைப் பற்றிச்சொல்லுமாறு 'அவருடைய ஊகமும் விவேகமும் வார்த்தையிலாவது அபிப்பிராயத்திலாவது அன்று. ஆனால் நடக்கையிலும் செய்கையிலும், தன்னையும் பிறரையும் நல்லவரும் பெரியவருமாகச் செய்யுங் கருத்தை உண்டாக்கின."

## முத்துக்குமார கவிராசர்

# முத்தகத்திரயம்.

### உபந்நியாசம்.

முத்துக்குமார கவிராசர், ஏறக்குறைய ஐம்பதுவருடங்களுக்கு முன்னே யாழ்ப்பாணத்திலே நம்மூராகிய சுன்னாகத்திலே பாடும் புலமையிற் சிறந்தவராயிருந்த ஒரு புலவர். உடுவிற்பதியிலே வேளாளகுலத்திலே சந்திரசேகர மாப்பாணர் சந்ததியிலே தோன்றிய அம்பலவாணபிள்ளை என்பவரே இவருக்கும் எமது தாதைதன்றாதைக்கும் தந்தையார். இவ்வுரிமை பற்றி இவர் பாடல்களை நிலைபெறுத்தல் கடப்பாடாயிற்று. இவராற் பாடப்பட்ட தனிப்பாடல்களுக்கு அளவில்லை என்பர். அச்சிடப்பட்டிருக்கும் ஞானக்கும்மி யேசுமதபரிகாரம் என்னும் நூல்கள் செய்தவரும் இவரே. வேறும் சிறுநூல்கள் சில செய்துளர் என்பர். ஒன்றும் ஏட்டில் எழுதப்பட்டிருக்கவில்லை. அங்கில திராவிட பண்டிதராய் நன்கு விளங்கிய சி. வை. தாமோதரம்பிள்ளைக்கும் தமிழாசிரியர் இவரே. பிள்ளையவர்கள் தமது நூற்பதிப்புரைகளிலே இவர்க்குக் கூறிய வணக்கமே அதற்குச் சான்றாகும்.

இவர்பாற்கேட்டுப் பாடஞ்செய்திருந்த அப்பொழுதை முதியோர் வாய்க்கேட்டிருந்தோர் சிலருளர். அவருள்ளும் வயோதிகத் தளர்ச்சியினால் முழுப்பாட்டும் சொல்ல இயலாது மறந்தவரும் சிலர். சிலர் வாயிலாகச் சிலபாட்டுக்கள் அகப்பட்டன. அவைகள் அநுப்பிராசம், யமகம், பிரகேளிகை முதலிய சொல்லலங்காரங்கள் நன்கமைந்து விநோதகவிகளாயிருக்கின்றன. கிராமாந்தரங்களிலும் சில முதியோர் வாயிலாகச் சில கவிகள் பெறலாம் என்று சிலர் கூறுகின்றனர். அகப்படுவனயாவும் திரட்டிச் சடிதியில் அச்சிடப்படும். இப்பொழுது செந்தமிழ்கற்கும் தமிழ்ப்புலவர்கள் அங்கீகரணநிமித்தம் மூன்று கவிகளை மாத்திரம் ஈண்டுக் காட்டுதும்.

*

## கட்டளைக் கலிப்பா.

பன்னி ரண்டு கரகந் தனையெட்டு
　　பானை யைத்துண் டதரக் குயவனை
முன்னி ரண்டு குடங்கையி லேந்தியை
　　முட்டி முட்டிமல் லார்மாவைச் சாடியைப்
பொன்னி ரண்டு பெரும்பெருஞ் செட்டியைப்
　　போற்று வீர்புல வீர்சக ளந்தனை
மூன்னர் வைத்த கலசப்பத் தும்பெறீஇ
　　முதன்மை சால்பெரு வாழ்வுறன் மெய்ம்மையே.

இது நாமாந்தரிகை என்னும் பிரகேளிகைவகையமைந்துச் சுப்பிரமணியக் கடவுள்மீது பாடிய கட்டளைக் கலிப்பா.

பிரகேளிகையாவது சொல்லக்கருதியபொருளை ஆழ்ந்து கிடக்குமாறு மறைத்து வெளிப்படையில் வேறொன்றுபோற்காட்டி வித்துவான்களை மயக்கி விநோதம் புரிதற்கேற்ற சொற்களாற் பாடப்படுவது. நாமாந்தரிகையாவது வெளிப்படையிலே நாமம் வேறொன்றாகக்காட்டிக் கருதிய பொருளை மறைத்திருப்பது.

இக்கட்டளைக்கலிப்பாவிலே கருதிய பொருளை மறைத்துக்கொண்டு வெளிப்படையில் வேறொருவகையாகித் தோன்றும் நாமங்களாவன:—கரகம், பானை, குடம், முட்டி, சாடி, கலசம், சால் என்னும் பாத்திரப்பெயர்கள். இவற்றுள்ளே சில பன்னிரண்டு கரகம், எட்டுப்பானை, இரண்டு குடம், கலசம் பத்து எனத்தொகை பூண்டும் நிற்கின்றன. செட்டி என்பது வந்த வரிசை நோக்கிச் சட்டி என்னு பாடம் கொள்ளும்படியும் மயக்குகின்றது. குயவனை என்பது இப்பாத்திரங்களை வனைந்துகொடுக்கும் குலாலனை நினைப்பிக்கின்றது. கரகத்தைப், பானையைச், சாடியைச், சட்டியைத்துதித்தாற் கலசம் பத்துப்பெற்று வாழலாம் என இயையும். கரகந்தனை என்புழித் தன் சாரியை.

இங்கே மறைந்து நின்ற பொருளையுங் கூறுதும். பன்னிரண்டு கரகந்தனை - பன்னிரு திருக்கரங்களையுடைய கந்தசுவாமியை—எள் துப்பு ஆனை ஐ துண்டம் அதரம் குயம் அனை முன் இரண்டு குடங் கையில் ஏந்தியை - எட்பூவினையும், பவளத்தினையும், யானையையும்

முறையே நிகர்த்த அழகிய மூக்கு, அதரம், முலை என்பனவற்றினையுடைய உலோகமாதாவாகிய உமாதேவியாரால் முன்னரே உள்ளங்கை இரண்டினாலும் ஏந்தி வளர்த்தருளப் பட்டவரை—முட்டி முட்டி மல்லார் மாவைச்சாடியை - பலமுறை எதிர்த்துப் போராடி வலிநிறைந்த மாமரவடிவாய் நின்ற சூரபன்மனைக் கொன்றருளினவரை—பொன்னிரண்டு பெறும் பெரும் செட்டியை - தெய்வயானையம்மை, வள்ளியம்மை என்னும் மகளிரிருவரையும் மனைவியாகப் பெற்றுக்கொண்ட பெரிய செட்டியை—புலவீர் போற்றுவீர் - புலவீர்காள் போற்றக்கடவீர்—சகரந்தனை முன்னர் வைத்த கலசம் பத்தும் பெறீஇ - சகலசம்பத்துக்களையும் பெற்று—முதன்மைசால் பெருவாழ்வுறல் மெய்ம்மையே - முதன்மை நிறைந்த பெருவாழ்வினையடைதல் சத்தியம் என்க.

கரகந்தன் என்பது வடநூன் முடிபு. கந்தன் - பகையை அழிப்போன். என் + துப்பு + ஆனை - எட்டுப்பானை. எட்டுப்பானையைத் துண்டாக்குபவனை என்பது கிரமம் என்னும் அலங்காரம். தமிழ்நூலார் நிரனிறை என்பர். ஸ்தனத்திற்கு உபமானமாகக் கூறப்படும் பொருள்களுள்ளே யானையும் ஒன்றாய் நிற்றலால் ஆகுபெயராக்கி அதன் கொம்பு எனக்கொள்ளுதல் அநாவசியகம். துண்டதரம் என்புழி அகரம் தொகுக்கும்வழித் தொகுத்தல். அனை என்பது இடைக்குறை. குடங்கை - உள்ளங்கை. ஏந்தியை என்பது இல்வாழ்வானென்பான் என்பதுபோல நின்ற நயக்கு. முட்டி முட்டி என்னும் அடுக்குப் பன்மைமேற்று. மா என்றது மாமரவடிவாய் நின்ற சூரபன்மனை. பொன் உவமவாகுபெயர். செட்டி என்பது "திருத்தமிழ் மதுரைதன்னிற் சிவன்பொருணிறுக்கு மாற்று - ஓருத்திர சன்மனாகி" வசியர் மரபிலே உதித்த காரணம் பற்றி வந்த பெயர். உருத்திரசன்மராதல் பற்றிப் பெருஞ்செட்டி எனப்பட்டார். கலசம்பத்து என்னுஞ் சொற்றொடரின்முன் சகரம் என்னும் எழுத்தினை வைக்குங்கால் அது சகல சம்பத்து என முடிந்து நிற்கும். சகலசம்பத்து என்றது வலி, ஆண்மை, கல்வி, பொருள், புகழ்முதலியவாய் இம்மையிற் பெறுதற்குரிய பெருஞ் செல்வங்களை. சம்பத்து - பெருஞ்செல்வம். முதன்மைசால் பெரு

வாழ்வு என்றது ஆக்மலாபமாகிய பேறிரண்டுள்ளும் வீறுடைய தாய் முதன்மைசான்று விளங்கும் நிரதிசயானந்தமாகிய பேரின்ப வாழ்வினை.

புலவிர்காள்! முருகக்கடவுளைப் போற்றுவீராயின்; இம்மையிற் சகலசம்பத்துக்களையும், இறுதியின் முத்தியின்பத்தையும் பெறுவீர் என்பது தாற்பரியம்.

இது புலவிர்காள்! முருகக்கடவுளைப் போற்றக்கடவீர்கள் என்று நற்பயன் கூறி நெறிப்படுத்தலாற் புலவராற்றுப்படை என்னும் பாடாண்டிணைத்துறைமேற்று.

இக்கட்டளைக் கலிப்பாவினடிகளுள்ளே சில வடிகளின் பாதி ஒருமாமுக்கூவிளம் என்னும் விதியிலமையாது நிற்றல் என்னையோ? என்பாருமுளர். எண் சீரடியாகிய கட்டளைப்பாவினடி இருதூக்குற்று இரட்டைச்சந்தமாய் நிற்கும் என்றும், ஒரு தூக்காகிய பாதியடி ஒருமா முக்கூவிளமாய் நிற்கும் என்றும் கூறும் விதியுமுண்டு. பாதியடியினுள்ளே தேமா, தேமாங்காய், புளிமா, கருவிளம், புளிமாங்காய் என்னும் வாய்பாட்டுச்சீர்கள்வரும் சான்றோர் கவிகளுமுள. ஆயினும் வெண்டளையியையும் நேரசைகொண்டு தொடங்கும் பாதியடிக்குப் பதினொன்று, நிரையசை கொண்டு தொடங்கும் பாதியடிக்குப்பன்னிரண்டு என்னும் எழுத்தளவையும் வழுவுவதில்லை. ஆகலின், ஒருமாமுக்கூவிளம் என்பது ஆதுனிகவிதிபோலும்.

வில்லிபுத்தூரார் பாரதத்திலே வரும் விருத்தங்களுட்சில, கட்டளைப்பாவுக்கென்று இப்போதுகொள்ளப்படும் விதியும் இசையும் பிறழாது நிற்கின்றன. ஆதலால் அப்பொழுதைச் சான்றோர், இப்பொழுதைச் சான்றோர் கட்டளைக்கலிப்பா என்று கொள்ளுஞ் செய்யுளை விருத்தமென்றே கொண்டார் என்பது பெறப்படுகின்றது.

இக்கட்டளைக்கலிப்பாவிற்போலப் பாதியடிகளிலே கூவிளம் நிற்றற்குரிய இடத்திலே புளிமாங்காய்ச்சீரும், தேமா, கருவிளம், புளிமா, என்னும் வாய்பாட்டுச் சீர்களும், தேமாங்காய்ச் சீரும் வருதலைக் குமரகுருபரசுவாமிகளுடைய கலம்பகங்களிலே வரும் கட்ட

ளைக் கலிப்பாக்களிலும், பாரதத்திலே கீசகன் வதைப்படலத்திலே விருத்தமென நிற்குங் கட்டளைக் கலிப்பாக்களிலும் காண்க. கலிவிருத்தபேதங்களுள்ளே ஒரு சந்தம் இரட்டித்து எண்சீராய் வருவதே கட்டளைக் கலிப்பாவினடியாகும் என்பாருமுளர்.

செந்தமிழ் படிக்கும் தமிழ்ப்புலவர்களுக்குக் காட்டுமாறு கருதியமூன்றனுள்ளே மற்றைக்கவிகள் இரண்டும் சாவகாசம் பெற்று மீண்டு வெளிப்படுத்தப்படும். இவைகள் எஞ்சியவற்றோடு சேர்த்துப் புத்தகவடிவமாகவும் பிரகடனஞ் செய்யப்படும்.

அ. குமாரசுவாமிப்பிள்ளை.

---

# *"மதுரைஸ்தானீகர்வரலாறு."

"சுவாமியுடையவர் திருவாலவாயுடைய தம்பிரானர் காபாலியுடைய நயினர் திருக்கோவில், ஸ்தானீகருடைய, ஆதிவரலாறு:—

"ஆதியில் புராணசித்தமாய்க், குலசேகரபாண்டியமகாராஜா நாளையில் கலியாண நகரத்திற் பட்டாபிஷேகம் பண்ணுவித்துக்கொண்டு ராஜ்ஜியபரிபாலனம் பண்ணிவருகிற நாளையில், காரணாந்தரமாய் நகரிக்கு வந்து தேவதாநிர்மாணமாயிருக்கப்பட்ட இந்திரவிமான வாசராகிய ஸ்ரீமீனாக்ஷிசுந்தரேசுவரரையும் பொற்றாமரைத் தடாகத்தையுங்கண்டு தரிசனம்பண்ணி, சுவாமியைப் பூசைசெய்வதற்கு வடக்கேயிருந்து பிராம்மணர்களை வரவழைத்து, சாஸ்திரபிரகாரம் பூஜையும் நடப்பிவித்துச்சிறிது திருப்பணியும் நடப்பிவித்து, சுந்தரலிங்கமே குலதெய்வமென்பதாய் ராஜ்ஜியபரிபாலனம் பண்ணிக்கொண்டு வந்தார்.

"உடையசிவன் புதல்வன் உக்கிரனுக்கப்பாலடையும் முடியையெட்டுலக்ஷம்" பாண்டியராஜாக்கள் மனுநீதி தப்பாமல் தெய்வதாம்சமாயிருக்கப்பட்டவர்கள், அநேக கோடிகாலம் ராஜ்ஜியபரிபாலனம் பண்ணிவந்தார்கள். இது புராணசித்தமான விஷயம்.

---

* இவ்வசனநூல், முன்வெளிவந்த "மதுரைத்தலவரலாறு" போலவே, மதுரைத்திருக்கோயிற் சரித்திரங்கள் சிலவற்றை நன்குவிளக்குவது. முன்னதினும் சரித்திரமிகுதியுடையது. ப - ர்.

"ஆதியில், கலியுகம் ரத்தாக்ஷி-௵ சித்திரை௴ ௰௩-௳ செவ்வாய்க்கிழமையிற் பிறந்தது. அன்றுமுதல் அநேக பாண்டியர் சுந்தரலிங்கமே குலதெய்வமென்று சுவாமியினிடத்திலே சதாபக்தி பண்ணிக்கொண்டு சிவாநுக்கிரகத்தினாலே ராஜ்யபரிபாலனம் பண்ணிவந்தார்கள்.

"கலியுகம் ௪௲௩௱௮௰-க்கு மேல் சகாப்தம் ௲௨௱-க்கு மேல் செல்லாநின்ற வெகுதானிய ௵ பாண்டிய ஆதீனம் அருதியில் வாளால் விழித்துறங்கும் பராக்கிரமபாண்டியன் ராஜ்ஜியபரிபாலனம் பண்ணுகிற நாளையிலே, அப்போது இருந்த ஸ்தானீகர்கள் முந்தின மடாதிபத்தியம் கௌடப்பிராம்மணர்களில் சுந்தரபாண்டிய ப்பிரம்மாதிராயர் இரண்டு சந்நிதானம் சைவாசாரியம் பூஜாகர்மம் தேவதாகாரியம் பண்ணிக்கொண்டு வந்தார். இரண்டாமடாதிபத்யம் ஆரியரில் மனுநீதிகண்ட பிரம்மாதிராயர் பிரதானமூர்த்தி இரண்டுசந்நிதானத்துக்கும் பரிசாரகத்தொழிலு முற்சவமூர்த்தி, இளையநயினார், மாறியாடுவார் மற்றப்பரிவாரதேவதைகளுக்கு முண்டான சைவாசாரியம் பூஜாகர்மம் தேவதாகாரியம் பார்த்து வந்தார்.

"௩-வது:—மடாதிபத்யம் செட்டிமுதலியார், திருமாலை திருவிளக்கு ஸ்ரீபண்டாரங்காவல் திருமேனிகாவல் நூர்வைப்பணிவிடை வரைக்கும் அவர்செய்துவந்தார்."

. "௪-வது அநந்தமன் விழுப்பாதராயன் சறட்டுக்கணக்கன், ஸ்ரீபண்டார முதல் கணக்கு மெழுதிக்கொண்டு வந்தான்."

"௫-வது முனிவறியாதபெருமாள் மடாதிபத்யமும் ஸ்ரீபண்டார முதல் ரிஷபமுத்திரையும், சுயம்பாகம், திருமஞ்சனம், பரிவட்டசுத்தி முதலான பணிவிடையுஞ் செய்துவந்தார்."

"௬-வது மடாதிபத்தியம் உலகுடைய பெருமாள் ஸ்ரீபண்டார முதல் ராஜக்ர முத்திரையு மிரண்டுசன்னிதியிலும் வேதபாராயணமும் தெய்வகாரியத்துக்கெல்லாம் புரோகிதமுஞ் செய்துகொண்டு வந்தார். இப்படிக்கு, ௬-பேர் மடாதிபத்தியக்காரருஞ் சுவாமிகாரியம் பிரதானமாகப்பார்த்து வந்தார்கள். சகாப்தம் ௲௨௱௪௰௫-க்கு மேல் ருத்திரோத்காரி௵ ஆனி௴ ௨௰௨-௳ டில்லியிலிருந்து பாச்சாவா

சல் மந்திரி, ஆதிசுலுத்தானும் மலுக்கநேமியாரும், அறுபதினாயிரம்
குதிரையுடனே புறப்பட்டுச் சீமையிலுண்டான சிவஸ்தலம், விஷ்ணு
ஸ்தலம், கோவில் குளமெல்லாம் இடித்து ஸ்ரீபண்டாரமுதல் கொள்
ளையிட்டுக்கொண்டு பிம்பங்களைக்கூட மோசப்படுத்துவித்துத் திரி
சிரபுரம் வந்து சேர்ந்தார். அவ்விடத்திலுள்ள ஸ்தானீகரு மெடுபட்
டார்கள். ஸ்தலங்களுமெடுபட்டுப் போயின. இந்தசமாசாரம் வா
ளால் விழித்துறங்கும் பராக்கிரமபாண்டியரா்ஜா கேட்டுப்பயந்து,
காளையார்கோவில் அரண்போய்ச்சேர்ந்தார். அப்போது ஸ்தானீ
கர்கள் ராஜாவில்லாத பட்டணத்திலிருக்கிறது எவ்விதமென்று,
அநேகஸ்தலங்கள் முழுகிப்போன வயணங்களுந் தெரிந்து கொண்டு
அப்போதவர்கள் நடப்பிவித்த விதம்:—சுவாமியுடையவர் திருவா
லவாயுடைய தம்பிரானுருக்குக் கெர்ப்பக்கிரகத்துக்குள்ளே சுவா
மிக்குக் கிளிக்கூண்டுபண்ணுவித்து மண்மேடுகள் போட்டுக் கெர்ப்
பக்கிரகத்து வாசலுங் கல்வரிதீர்ந்து அர்த்தமண்டபத்தில் வேறே
யொருலிங்கத்தைப் பிரதிஷ்டை பண்ணுவித்து மூலப்பேர்நாச்சியா
ரையும் அஷ்டபெந்தனம் செய்து விமானத்தின் மேற்போக்கிலே
நாச்சியாரை யெழுந்தருளப்பண்ணுவித்து உற்சவமூர்த்தி இளைய
நயினாரையும் பின்னுமுள்ள பரிவாரவிக்கிரகங்களையும் முசுகுந்தீசு
வரமுடையார் போக்கிலே பூ பதனம் பண்ணுவித்துப் போட்டு
சொர்ன்ன நாயகரையுஞ் சிறிது சொர்ன விக்கிரகங்களையு மெடு
த்துக்கொண்டு நாஞ்சில் நாட்டில் கிலுகிலுப்பைக்காடுபோய்ச் சேர்
ந்தார்கள். அவர்கள் போகிறபோது கரியமாணிக்கப் பெருமாள்
கோவிலில் முன்பூஜைபண்ணிவந்த சோழியரில் குலசேகரப்பெருமா
ளென்கிறவர் தாயாதிக்காரருடனே நெருசலாய் ஆரியரில் மனுநீதி
கண்ட பிரம்மாதிராயருக்குள்ளே வந்து சரணம் புகுத, அவர்
தமது பிள்ளையைப்போலே பாவித்து யாதொருவேலையிலும் நம்
பிக்கையாய்த் தங்களுடைய பணிவிடைக்கெல்லாம் சகாயமாய்க்
கூடவைத்துத் தொழில் பண்ணி வந்தார்கள். அந்தக் குலசேகரப்
பெருமாளிடத்தில் குச்சிலையும் நம்பிக்கொடுத்துப் பிரதான மூர்த்தி
கள் பரிவாரதேவதைகள்—பூபதனம்பண்ணியிருக்கிற ஸ்தலமும் ஸ்ரீ
பண்டாரப்போக்குஞ் சொல்லித் தாங்கள் கைக்கொண்டுள்ள சைவா
சாரியம் பூஜாகர்மம் தேவதாகாரியம் பார்த்துவரச்சொல்லித்திட்டம்

பண்ணுவித்து எங்கள்வழியிலேந்துவயதுக்குழந்தைவந்தாலுங்குச்சுக்கொடுத்து விடுவோமாகவும் என்று செப்பேடு வாங்கிக்கட்டிக்கொண்டு தாங்கள் ஸ்தலம் வந்து சேருகிறவரைக்கும் பூசைபண்ணிக்கொண்டுவரச்சொல்லி நியமித்துப் போனார்கள்.

“அதற்குமேல் திருச்சிராப்பள்ளியில் வந்திருந்தபாளையம் ஆனி மீ ௨௦-உ மதுரைக்கோட்டையை வந்து கட்டிக்கொண்டு பாண்டியன் கோட்டையும் பிடித்துக் கோவில் திருமதில் கோபுரம் முதலான திருப்பணிகளனேக மிடித்துப்போட்டார்கள். அப்போது பாளையத்தில் காரியஸ்தராகவந்திருக்கும் நிரியம்பகராயர் நிரம்பவும் சிவபக்தியுள்ளவரானதால் கோவிலுக்கு தெரிசனத்துக்கு வந்தார். தெரிசனப்பண்ணிக்கொண்டு பிரதக்ஷிணம்வருகையில் விமானத்திலிருக்கிற எட்டு யானைகளையும் பார்த்து இந்தவயணம் என்னவென்று கேட்டார். அப்போது சொக்கனென்றொரு தபசி, எல்லாம் வல்லசித்தமூர்த்தி சந்நிதானத்தில் தவசுபண்ணிக் கொண்டிருந்தார். அவரைக்கேட்கும்போது, முன்னொரு பாண்டியனாளையில் இந்த விமானத்திலிருக்கிற கல்லானையைக் கரும்புதின்னப் பண்ணுவித்தார். அப்படிப்பட்ட அருமையான ஸ்தலமென்று நிரம்பவுஞ்சொன்னார். அப்படியாவென்று அதிசயப்பட்டு, இப்போது நாம் கொடுக்கிறோம். சாப்பிட்டதானால் நீர் சொன்னவார்த்தை யொப்புக்கொள்ளலாமென்று சொன்னார். அப்படியே வாங்கிச் சாப்பிடுமென்று சொன்னார். இந்த அதிசயத்தைத் தங்கள் பாளையத்துக்கு எஜமான் ஆதிசுலுத்தானிடத்திலும் மலுக்கநேமியிடத்திலும் அறியப்பண்ணுவித்து அவர்களையுங் கோவிலுக்குள்ளே கூட்டிவந்து கரும்பு வரவழைத்து ஆதிசுலுத்தான் கையினாலேகொடுக்க விமானத்திலிருக்கிற யானையானது கையினாலே வாங்கிப்புசித்தது. இந்த அதிசயத்தைப்பார்த்தவுடனே ஆதிசுலுத்தானுக்கும் மலுக்கநேமியானுக்கும் கைகால் நடுக்கமுண்டாகி இதுவரையிலும் இப்படி அதிசயங்காணவில்லை ; இதிலே அல்லாவிருக்கிறார் என்று மனமகிழ்ந்து அப்பால் எடுபட்டுப்போன திருப்பணிகள்போக காபாலியுடையவர் திருமதிலும் கெர்ப்பக்கிரக முதல் ஆறுகாற்பீடம்வரைக்கும் பாண்டியர்செய்த திருப்பணியில் இவ்வளவும் நிலைத்தது.

"அப்பால் தவசிரூபமாயிருந்த சொக்கநாதனைப் பார்க்குமிடத்தில் கண்மறைந்தார். இது சுந்தரலிங்கம் பண்ணின திருவிளையாடல்; தெய்வரகசியம். அப்பால் துலுக்காணமாய்ச் சீமையெல்லாம் கட்டிக்கொண்டு பாண்டியனையும் கைப்பிடியாய்ப் பிடித்துத் தங்கள் சீமைக்கு யனுப்புவித்துப்போட்டு மூன்று ௵ சீமையைக்கட்டிக் கொண்டார்கள். அப்போது சீமைகளில் நடப்பிவித்த அநீதமெழுதிமுடியாது. கலாபங்தெளிந்து, அட்சய ௵ முதல் பிரசோற்பத்தி ௵ வரைக்கும் உலாபதிகான் ஆறு ௵ சீமையாண்டான். ஆங்கிரச ௵ முல்லாவென்கிற துருக்கன் சாதாரண ௵ வரைக்கும் ஆண்டான். உருத்திரோத்காரி ௵ முதல் சாதாரண ௵ வரைக்கும் வருஷம் சஅ-க்கு துலுக்காணமாயிருந்தது. அப்படியிருக்கையில் கலியுகம் சதுசாஎளஉ-க்குமேல் சகாப்தம் ஆஉாகூயகூ-க்குமேல் விரோதிகிருது ௵ மைசூர் இராஜாவின் வாசல் தளகர்த்தம் கம்பணவுடையார் வெகுபாளையத்தோடு வந்து துலுக்கரையெடுத்துவிட்டுச்சீமையைக்கட்டிக்கொண்டார். அப்போ தந்தப்பிரபு லிங்கதாரியானதினாலேயும், வீரசைவமானபடியினாலேயும் கோவில் ஸ்தானீகர்களை விசாரிக்குமிடத்தில் குலசேகரப்பெருமாளென்கிறவர் நான்தான் ஸ்தானீகனென்று வந்து கண்டுகொண்டார். நீர் ஸ்தலத்துக்கு உடையவரென்றால் அத்தாட்சியொப்புவித்தாலொப்புக்கொள்வோமென்று சொல்லுமிடத்தில், முந்தின ஸ்தானீகருடனே கூடஇருந்து கருமானமெல்லாந்தெரிந்தவரானதினாலேயும், ஆரியருக்குள்ளே கூடவிருந்து தொழில் செய்துவந்தபடியினாலேயுங் கருநாடகம் பிறந்து நல்லராஜா வந்திருக்கிறபடியினாலேயும் ஸ்தலத்தைப் பிரபலப்படுத்திவைக்க வேணுமென்று பிரபுவைக் கோவிலுக்குள்ளே அழைத்துப்போய்க் கெர்ப்பக்கிரகம் கல்வரியும்பிரித்து மண்மேடுங் கிளிக்கூடும் பிரித்துப்பார்த்துவருகையில், மூலலிங்கத்தைக் கண்டு தரிசனம் பண்ணினார். அப்போது, இருந்தபடி;—முன்னிருந்த ஸ்தானீகர்கள் சாத்திவைத்த வெண்பட்டும் சர்ப்பூரம், குங்குமப்பூ, கோரோசனை, கஸ்தூரி, இதுமுதலான வாசனையிட்ட சேர்வை மலாக்காச்சந்தனமும் சாத்தினபடியேயிருக்கச் செண்பகப்பூமாலையும் இரண்டு வெள்ளிக்குத்துவிளக்கு நிறைய நெய்யும் இட்டபடிக்கு சொலிக்க, பிரபு சுவாமி திருவுருவைக்கண்டார்.

"அந்த மாலைசந்தனத்தைக்கழித்துப்பார்க்குங் காலையில் காலசந்தியில் சாத்துவித்து, உச்சிக்காலத்தில் கழித்தாலெப்படியிருக்குமோ, அப்படிக்குச் சந்தனமுங் காயாமல் மாலையும் வாடாமலிருந்தது. இந்த அதிசயத்தைப்பார்த்து மிகவுஞ் சுவாமியினிடத்திற் பக்தியுண்டாகி இந்தப் பிரசாதத்தை மைசூரில் தங்கள் ராஜாவுக்கு அனுப்புவித்தார். அதன்பேரில் மூலப்பேர் நாச்சியார் உற்சவமூர்த்தி இளையநயினாரிருக்கிற இடங்களையுங் காண்பிவித்த பிறகு, இவர்தான் ஸ்தானீகரென்று நிசமொப்புக்கொண்டு, மூலப்பேர் நாச்சியாருக்கு அஷ்டபெந்தனமுஞ் சாத்துவித்து, மகா சம்ரோக்ஷணையும், தூ-பொன்வரைக்குஞ் செலவழித்து நடப்பிவித்து மாளவச்சக்ரவர்த்தி குலசேகரபட்டரென்று பேருங்கொடுத்து ஆசாரிய அபிஷேகம் பண்ணுவித்து சுவாமிக்கு சைவாசாரியம் பூஜாக்கிரமம் தெய்வதாகாரியம் நடப்பிவித்துக்கொண்டு வரச்சொல்லி நியமனம் பண்ணுவித்தார்கள். முன்னிருந்த ஸ்தானீகர்கள் எடுபட்ட நாள் முதல் ஞூ டுய-க்கு குலசேகரப் பெருமாள் தாயாதிக்காரர் எ-பேரும் ஏழுபங்காய்ப் பிரித்துக்கொண்டு பங்குக்கு நான்குநாள் வீதம் உஅ நாள்திட்டமாய் சுவாமி பூஜாகாரியம் நடப்பிவித்துக்கொண்டுவருகையில் ஆறு பேர் வங்கிசமற்று ஒரு வீட்டுக்காரர் மிஞ்சினார். அப்போது சகாப்தம் தூஉாகூயகூ-க்கு மேற்செல்லா நின்ற பிங்கள ஞூ வரையில் இந்த மாளுவச்சக்ரவர்த்தி குலசேகரப்பட்டரொருவராய் அவர் செய்து வருகிற பூஜாக்கிரமம் பிரபுமனசுக்குச் சரிப்படாமல் கம்பணவுடையார் குமாரன் எம்பணவுடையார் ராஜரீகத்தில் வடக்கேயிருந்து பின்குடுமிக்காரரில் வடமன்-சதாசிவப் பட்டரென்கிறவர் ஒருவரை வரவழைத்தார்.

"அவர்-படித்தவரும் நல்ல யோக்கியருமானபடியினாலே, அவரைத்தினந்தோறும் இரண்டு சன்னிதானத்துக்கும் யோக்கியமாய் பூஜைபண்ணி வரட்டுமென்று, அவருக்கு ஆசாரியாபிஷேகம் பண்ணுவித்து, அருந்தமன் விழுப்பாதராயன் வகைக் காலிங்கராயன் கணக்குப்படிக்கு, முந்தின ஸ்தானீகர் சுந்தரபாண்டியபிர்ம்மாதிராயர் செய்கர்மமும் மடாதிபத்தியமும், சதாசிவப்பட்டருக்குக் கட்டளையிட்டு"விக்கிரமபாண்டிய பட்டரிரண்டுபேருக்குங் சைவாசாரியம் பூஜாகர்மம் கொடுத்து நடப்பிவித்துக்கொண்டு வந்தார். மாளுவச்

சக்கரவர்த்திகுலசேகரப்பட்டருக்கு இரண்டாவதுமடாதிபத்தியமும் மனு நீதிகொண்ட பிர்மாதிராயர் செய்கர்மஞ் சகலமுங் கணக்குப் படிக்கு, இருவருக்கு மாசாரியஅபிஷேகம் பண்ணுவித்து உற்சவ மூர்த்தி இளையநயினர் மாறியாடுவார் முதலான பரிவார தேவதைகளுக்குமுள்ள சைவாசாரியம் பூஜாகர்மம் தெய்வதாகாரியஞ் செய்துவரச்சொல்லி, இரண்டு சன்னிதான மூலஸ்தானத்திற்கும் பரிசாரகமுங் கட்டளையிட்டார்கள். கெட்டி முதலியார் வழியில் வளர்ப்பு வகையில் முதலியப்பனும், சொக்கமுதலியு மிரண்டுபேரையுந் தற்புருஷதேவ முதலியென்றும் பெரியதேவமுதலியென்றும் பேருங்கொடுத்து கெட்டிமுதலியார் மடாதிபத்தியத்துக்குண்டான தொழிலுங் கணக்குப்படிக்குக் கட்டளையிட்டார்கள். காலிங்கராயனுக்கு விழுப்பாதராயனென்று பேருங்கொடுத்து சகலகணக்குங் கட்டளையிட்டார்கள். முனிவறியாதவகைச் சோழியரில் பாண்டியநாட்டு முதலியாருக்கு அவருடைய மடாதிபத்யமுங் கட்டளையிட்டார்கள். இந்தப்படிக்கு அவரவர் காணியாட்சி யாண்டுவருங்காலத்திற் சிலநாளைக்குப் பிறகு குலசேகரபட்டர்வழிப் பெண்ணைச் சதாசிவப்பட்டர் வழியில்கொடுத்துப் பெண்ணுக்குச் சீதனமாக, ஏழுநாள் பரிசாரகமுறையையும் சக்கரவர்த்தி விட்டுக்கொடுத்தார். மற்றவை சக்கரவர்த்தி யாண்டுவந்தார்.

"கிலுகிலுப்பைக்காடுபோன ஸ்தானீகர்களும்சொர்ணநாயகரும் ஸ்தலம் வந்து சேரவில்லை. அப்பால், சதாசிவப்பட்டரொரு வீட்டுக்காரராக இருந்தபடியால் தமக்குச் சூதகம் வந்தால் பூஜாகிரமத்துக்குக் கையாள்வேணுமென்று, நெட்டூராரில், சோழியரில், ஒரு வீட்டுக்காரரை வரவழைத்து, அவர், அவர்களுக்கு ஆசாரியாபிஷேகம் பண்ணுவித்து நமக்குச் சூதகம் வந்தவேளையில் பூஜாகர்மம் செய்யவும் மற்ற நாட்களில் தனக்குச் சீதனம்கொடுத்த எ-நாள் பரிசாரகமுறையும் நெட்டூராரைச்செய்துவரச் சொல்லித் திட்டம்பண்ணுவித்துக்கொண்டு, இப்படிவரவரப் பத்துஜனங்களுஞ்சேர்ந்து திரவியமுஞ்சேர, படித்துவாசித்து வாசாலகனுயிருக்கிறபடியினலே சதாசிவப்பட்டர்வழி வலிமைபெற்றது. சக்கரவர்த்தி கையிளைத்தார். அப்படியிருக்கையில் எம்பணவுடையார்மருமகன் பொற்காசுடையா

ர் சித்திரபானு௵ வரைக்குப்௵ ஙஉ-க்கு ராஜ்ஜியம் ஆண்டார். சுபானு௵ முதல் விபவ ௵ வரைக்கும் ௵ கூயகூ-க்கு லக்கண நாயக்கர் மதனநாயக்கர் ராஜ்ஜியமாண்டார்கள். சுக்கில௵ முதல் நள ௵ வரைக்கும் ௵ சயஅ-க்கு பாண்டியன் வைப்பாட்டி காளையார்கோவில் தாசி அபிராமி வயிற்றுப்பிள்ளைகள் கூ-பேர்கள். அதில் மூத்தவர் சுந்தரமாவலிவாணதிராயர் பட்டமாண்டார். அவர் நாளையில் பாண்டியநாட்டாசாரியார் தீட்சை பண்ணாத நிமித்தம் அரமனையார் ஆயாசத்தினாலே யெடுபட்டார். பிங்கள௵ முதல் ஆங்கிரச௵ வரைக்கும் ௵ யிரு-க்கு தேணுநாயக்கர் பட்டமாண்டார். ஸ்ரீமுக ௵ முதல் தாது ௵ வரைக்கும் ௵ ச-க்கு இராமசாமி நாயக்கர் பட்டமாண்டார். ஈசுவர ௵ முதல் விஷு ௵ வரைக்கும் ௵ ரு-க்கு கூறகூறத்தி திம்மப்ப நாயக்கர் பட்டமாண்டார். சித்திரபானு ௵ முதல் சுபானு ௵ வரைக்கும் கட்டியம் காமய நாயக்கர் பட்டமாண்டார்."

(இன்னும் வரும்.)

---

௨

# மகாபாரதச்செய்யுட்படாந்தரம்.

முன்றொடர்ச்சி.

## பதினான்காம் போர்ச்சருக்கம்.

ரஅகூ. எற்றருந்தபனனேகினனியெனக்குவாசிகொடிநீடுதேர்
முற்றருங்கனலினெளியெழுந்ததெனமுரணழிந்திடமொ
(ழிந்துபோர்.

இக்கவியில், "முரண்மிகுந்திடமொழிந்து" எனக்காணப்படுகின்றது "முரண்மிகுந்திட மொழிந்து" என்பதே பொருட் பொருத்தமுடைத்தென்க.

## பதினைந்தாம்போர்ச்சருக்கம்

ஙச. கற்கொண்டுகன்மழை முன்றடுத்தகண்ணன் கற்கறித்துப்
பன்முறித்துக்கழறத்தானு, முற்கொண்ட விரதமறந்தி

யாருங்கேட்பமுரசுயர்த்தோன்பொய்சொன்னன்மூழ்கி
லந்த...

இக்கவியில், "கண்ணன் கட்டுரைத்த மொழிப்படியே கருதார்போரின்" எனக்காணப்படுகின்றது. இப்பாடமே பொருட்சிறப்புடைத்தென்க.

## பதினாறும் போர்ச்சருக்கம்.

சய. மாரனுக்கிளையாமலம்பையைமாதவத்துவிடுந்
தீரனுக்குமொர் வர்ளிகொண்டுசெலுத்துதேருடைவெஞ்
சூரனுக்கெதிராகிமேனி துளக்கமெய்தியதோள்
வீரனுக்குமிருந்தபேரயர்விளையவேறொருபால்.

இக்கவியில், "தீரனுக்கு மொராழிகொண்டு" எனவும், "மேனிதுலங்குசோ னெனுந் தீரனுக்கும்" எனவுங்காணப்படுகின்றன. ஓராழியைக்கூறுதல் சூரியனிரதத்திற்குப் பொருத்தமுடைமையாலும், சோனையும் வெளிப்படையாகக் கூறவேண்டுமாதலாலும் இப்பாடமே பொருத்தமென்க.

## பதினேழாம் போர்ச்சருக்கம்.

யரு. ஏவருஞ்சாபபண்டிதன்புதனேவியவேலினல்யாங்கள்
வீவருந்தன்மையறிந்துவாகனமும்விறற்படைகளுமொழி
[த்திட்டாய்.

பதினேந்தாம் போர்ச்சருக்கத்தில் அசுவத்தாமன் நாராயணாஸ்திரமேவியதாகக் கூறப்படலால் "ஏவியவேவினல்" எனக்காணப்படும் பாடமே பொருத்தமுடைத்தென்க.

ஙங. கோவல்சூழ் பெண்ணைநாடன் கொங்கர்கோன் பகைஞர்
[வேந்தன்.

இக்கவியில், பகைஞர்வேந்தன் என்பது "பாகைவேந்தன்" எனக்காணப்படுகின்றது. பாகை என்பது வக்கபாகை என்னுநகரமாதலால் இப்பாடமே பொருத்தமுடைத்தென்க.

## பதினெட்டாம் போர்ச்சருக்கம்.

க. தாமந்தராதிபர்கள்பலரொடும்வலப்புடைசலிப்பின்றி
யணியவிறல்கூர், மாமந்தராதிபர்கள்பலரொடுமிடப்புடை
வகுப்பொடணியத்தினகரன், கோமைந்தன் மைந்தரிரு

வோரொடுஞ் சேனையைக் கொண்டுற வணிந்தனனிகற்,
சாமந்தர்மண்டலிகர்முடிமன்னர் சூழ்வரத்தரணிபதிபின்
[னணியவே.

இக்கவியில், "தாமன்றராதிபர்கள்" என்றும், "மாமன்றபாதிபர்கள்" என்றும், "கோமைந்தன் மைந்தரொரு மூவரொடு சேனையும் கொண்டுற" என்றும், "சாமந்தன் மண்டலிகர்" என்றும் காணப்படுகின்றன. தாமன் என்றது அசுவத்தாமனை. மாமனென்றது சகுனியை. மூவரென்றது, பின் ௩௪-ஆங்கவியிற் கூறியபடி, சித்திரசேனன், சூரியவன்மன், சித்திரகீர்த்தியென்பவரை. சாமந்தின் என்றது, தானைத்தலைவனாகிய சல்லியனை. இங்ஙனம் பொருள்கொண்டுரைக்கும் இப்பாடமே பொருத்தமுடைத்தென்க.

௨௦௪. பூசுரர்பெருந்தகைபரித்தாமாவிரியல் போனகிருபன்கிரு
தவன்மன்மூவருமுன், வாசவன்விரிஞ்சனுமைபாகனிவர்
முதல்வானவர்வழங்கியவிதப்போர்வாளிகளி, லாசுகன்
மகன்றனையுமப்போதே துணைவரானவரையுந்தலைதுணிப்
பமெனநாடியவர், பாசறைபுகுந்தனர் பரித்தேரியானை
யொடுபாரதமுடிந்தபதினெட்டாநாளிரவே.

இக்கவியில், "கிருதபத்மாமூவருமுன்" என்றும், "விரிஞ்சனுமைபத்தாமாயன் முதல்" என்றும், "விளங்கிய வயப்போர்" என்றும், "துணிப்பாளுடியவர்" என்றும், "பரித்தேர் யானை" என்றும் காணப்படுகின்றன. இப்பாடமே சந்தஞ்சிதையாமலிருப்பதால் பொருத்தமுடைத்தென்க.

முற்றிற்று.

சே. ரா. சுப்பிரமணியக்கவிராயர்.

# சேனாவரைய வாராய்ச்சி.

[உரு-ம் பக்கத்தொடர்ச்சி.]

எச்சவியல்-சூ-ருசு.

"கடிசொல் லில்லைக் காலத்துப் படினே."

இச்சூத்திரவுரை, சிலவிடத்துச்சிலசொற்களைக் கூட்டியும், மாற்றியும், ஓரிடத்துச் சிலவாக்கியங்களையே அடியோடு களைந்துவிட்டு அவ்விடத்து நச்சினார்க்கினியருரை வாக்கியங்களைச் சேர்த்தும் இரண்டு பதிப்புப்புத்தகங்களி லச்சிடப்பட்டிருக்கிறது. அது வருமாறு:—

"கடிசொல்லில்லைக் காலத்துப் படினே."

"இ-ள். இவை தொன்றுதொட்டன வல்லவென்று கடியப்படுஞ்சொல்லில்லை; அவ்வக்காலத்துத் தோன்றி வழங்கப்படுமாயின். எ-று"

"உ-ம். சம்பு, சள்ளை, * சட்டி, சமழ்ப்பு எனவரும். இவைதொன்றுதொட்டு வந்தனவாயின், † முதலாகாதனவற்றின்கண் "சகரக் கிளவியு மவற்றோ ரற்றே.- அ ஐ ஔவெனு மூன்றலங்கடையே" என விலக்கார் ஆசிரியர்; அதனான் அவை பிற்காலத்துத் தோன்றிய சொல்லேயாமென்பது."

"இஃது எழுவகை வழுவமைதியுள் ஒன்றகாது ஓர் பாதுகாவலாதலிற் கிளவியாக்கத்தியைபின்மையான் ஈண்டுக் கூறினரென்பது."

‡ [ "இனி ஒன்றெனமுடித்தலாற் புதியன தோன்றினாற்போலப் பழையன கெடுவனவும் உளவெனக்கொள்க. அவை அழான், புழான் முதலியனவும், எழுத்திற் புணர்ந்த சொற்கள் இக்காலத்து வழங்காதனவுமாம்." ]

இனி, பெரும்பாலும் ஏட்டிலுள்ளவையுள்ளவாறே பதிக்கப்பட்டுள்ள கோமளபுரம் இராஜகோபால பிள்ளையவர்கள் பதிப்பில் மட்டும் இச்சூத்திரவுரையும் ஏட்டிலுள்ளவாறே யச்சிடப்பட்டிருக்கிறது. அது வருமாறு —

---

* தடித்த எழுத்திலுள்ளவை ஏடுகளிலில்லை.

† கீழ்க்கோடிடப்பட்டுள்ளன மாற்றப்பட்டவை.

‡ [ ] இவ்வடையாளத்திற் குட்பட்டவை, நச்சினார்க்கினியருரை வாக்கியங்களாகக் காணப்படுகின்றன. சேனாவரைய ஏட்டுப்பிரதிகளிலில்லை.

"கடிசொ லில்லைக் காலத்துப் படினே."

"இவை தொன்றுதொட்டனவல்லவென்று கடியப்படுஞ்சொல்லில்லை. யவ்வக்காலத்துத்தோன்றி வழங்கப்படுமாயின். எ-று. சம்பு, சள்ளை எனவரும். இவை தொன்றுதொட்டு வந்தனவாயின் முதலாகக்கரத்திட் 'சகரக்கிளவியு மவற்றோரற்றே, அ ஐ ஔ வெனுமூன்றலங்கடையே' என விலக்காராமாசிரியர்; அதனானவை பிற்காலத்துத் தோன்றிய சொல்லேயாமென்பது. இஃதெழுவகை வழுவமைதியுமல்லதோர் பாதுகாவலாதலிற் கிளவியாக்கத்தியைபின்மையா னீண்டுக் கூறினாரென்பது. இஃதொரு சாரருரை. இன்னவனுவதிக்குங்காலமா மக்காலத்தவைவழுவன்மை யெல்லாவாசிரியர்க்கு முடன்பாடாகலி னதனைத் தழீஇக்கொண்டவாறென்க. இவையிரண்டு மிச்சூத்திரத்திற்குப் பொருளாகக்கொள்க."

எட்டிலுள்ளவா றச்சிடப்பட்டிருத்தலோடு பொருட்பொருத்தமுறுதலின் இதுவே சுத்தபாடமாம். இது பொருட்பொருத்தமுறுமாறு கீழே காட்டப்படுகிறது.—

இச்சூத்திரத்திற்கு ஆசிரியர் சேனாவரையர் பிறர்கூற்றாக ஒருரையும், தங்கூற்றாக ஒருரையும் ஆக இரண்டுரை கூறுகின்றார். "இவை தொன்றுதொட்டனவல்லவென்று" என்பது முதல் "ஈண்டுக்கூறினாரென்பது" என்பதுகாறும் ஒருரை. இதில், சொற்கள் அவ்வக்காலத்துப் புதிதுபுதிதாகத்தோன்றி வழங்கப்படுமென்றும், அவ்வாறு வழங்குங்கால் இவை தொன்றுதொட்டு வந்தனவல்லவாதலாற் கொள்ளப்படாவென அவற்றை விலக்கலாகாதென்றும், இதற்குச் சம்பு, சள்ளை என்பன உதாரணமென்றும், ஆசிரியர் மொழிக்கு முதலாமெழுத்துக் கூறுங்கால் "கதநபமவெனு மாவைந்தெழுத்து, மெல்லாவுயிரொடுஞ் செல்லுமார் முதலே" என்பதனையடுத்துச் "சகரக்கிளவியு மவற்றோரற்றே, அ ஐ ஔவெனு மூன்றலங்கடையே" எனக்கூறி, சகரம் அகர ஐகார ஔகாரங்களோடுகூடி மொழிக்குமுதலாகாதென விலக்கியிருத்தலின் சம்பு சள்ளை யென்பன பிற்காலத்துத் தோன்றிய சொல்லேயாமென்றும், இச்சூத்திரம் ஈண்டு வைக்கப்பட்டதற்குக் காரணமின்னதென்றுங் கூறப்பட்டிருக்கிறது.

"இன்னவனுவதிக்குங்காலமாமக்காலத்தவை வழூவன்மையெல்லா வாசிரியர்க்கு முடன்பாடாகலினதனைத் தழீஇக்கொண்டவாறென்க." என்பது மற்றோருரை. இதில், இன்ன என்றது சம்பு, சள்ளை முதலியவற்றை. அனுவதித்தலாவது முன்னருளதாகிய மொழியைப் பின்னர் வழங்குவதன்றே? அதனால், அக்காலத்தென்றது அவ்வாறு வழங்குங்காலத்தென்றவாறு. அவை என்றது அச்சொற்களை. எல்லாவாசிரியர்க்கும் என்றது; சத்தத்தை நித்தியமெனக்கொள்ளுர் வையாகரணர் முதலியோரும், அதனை அநித்தியமெனக்கொள்ளும் தார்க்கிகர் முதலியோரும் ஆகிய இருதிறத்தினர்க்கும் என்றபடி. அதனை யென்றது அச்சொற்கள் வழூவன்மையை யென்றவாறும்.

முன் உரையில் "அவ்வக்காலத்துத் தோன்றி வழங்கப்படுமாயின்" என்பதிலுள்ள "தோன்றி" என்பதற்கு அதுகாறுமில்லாத சொல் தோன்றி எனப்பொருள்படுதலானும், சத்தத்தை நித்தியமெனக்கொள்ளும் இலக்கண நூலார்க்கது பொருந்தாமையானும், அதனை "இஃதொரு சாராருரை" என்றும், இச்சொற்களின் வழக்கை அனுவாதமாகக் கொள்ளுதலே இலக்கண நூலுடையார்க்கு உடன்பாடாகலின் பின்னதைத் தம்மபிப்பிராயமாகவும் ஆசிரியர் சேனாவரையர் கூறியிருத்தல் கண்டுகொள்க.

எச்சவியல் சூ-ருச.

"குறைத்தன வாயினு நிறைப்பெயரியல."

இச்சூத்திரவுரையும் சூ-ருரு போலவே இரண்டு பதிப்புக்களில் மாற்றியுங் கூட்டியுங் குறைத்தும்,ஒருபதிப்பில் எட்டிலுள்ளவாறும் அச்சிடப்பட்டிருக்கிறது. அவை வருமாறு:—

"குறைத்தனவாயினு நிறைப்பெயரியல":

"இ - ள். குறைத்தனவாயினும் அவை குறையாது நிறைந்து நின்ற பெயரியல்பையுடைய எ - று. என்றது,முற்கூறிய உதாரணங்கள் தாமரை, ஒந்தி, நீலமென நிறைந்த பெயர்களின் பொருள்களைத்தந்தே நிற்குமென்றவாறும்."

"குறைந்த வழியும் நிறைந்த பெயராகக் குறைக்கப்படுவன பெயரேயாகலின், நிறைப்பெயரியல வென்றார்."

இது மாற்றியுங் கூட்டியுங் குறைத்து மச்சிடப்பட்டது. இதனில், "என்றது முற்கூறிய............என்றவாறும்." என்னும் வாக்கியம், சேனாவரைய ஏடுகளிலும் எட்டிலுள்ளவா றச்சிடப்பட்டுள்ள புத்தகத்து மின்மையானும், நச்சினார்க்கினியருரையிற்காணப்படுதலானும் அதிலிருந்தெடுத்துச் சேர்க்கப்பட்டதெனத் தெரிகிறது. "குறைந்த வழியும்........என்றார்" என்னும் வாக்கியத்தின் முதலிலும் இடையிலும் சிலசொற்கள் விடப்பட்டும், இரண்டு வாக்கியங்களொன்றாக்கப் பட்டுமிருத்தல் பின்னர் வருவனவற்றால் விசதமாம்.

"குறைத்தன வாயினு நிறைப்பெய ரியல."

"குறைத்தனவாயினு மவை குறையாது நிறைந்து நின்ற பெயரியல்பையுடைய. எ - று. என்றது குறைந்தவழியு நிறைந்த பெயராகக்கொள்க. குறைக்கப்படுவன பெயரேயாகலி னிறைப்பெயரியல் வென்றார்."

இது எட்டிலுள்ளவா றச்சிடப்பட்டது. இதினில் "என்றது............கொள்க" என்னும் வாக்கியம் முடிவெய்தாமனிற்கின்றது. இதன்கடையில் என்றவாறு என ஒரு சொற்பெய்யின் "என்றது குறைந்தவழியுநிறைந்த பெயராகக்கொள்க என்றவாறு" என வாக்கியம் முற்றுப்பெறுதலோடு பொருட்பொருத்தமு முறுகின்றது. ஆதலின் அவ்வாறே பெய்து வாசிக்கவேண்டுமென்பது. இவ்வாறே மேல் "எஞ்சியமூன் றும்" என்னும் எச்சவியல் சஅ-ம் சூத்திரத்துப், பிறண்டும் ஆசிரியர் சேனாவரையர் "என்றவாறு" என வாக்கியங்களை முடித்திருத்தல் கண்டுகொள்க. எழுதுவோர் கைதவறிவிடுதல், பாணம் விழுதல் முதலியவற்றால் ஏடுகளில் இவ்வாறிரண்டொரு சொல் விடப்பட்டிருத்த லியற்கையேயாம்.

இதுகாறும் முக்கியமான பிழைகளே காட்டப்பட்டன. இனியிரண்டொரு சிறுபிழைகளும் அவற்றின் திருத்தங்களுமட்டுங் காட்டி நிறுத்தப்படும். அவை வருமாறு;—

(க) வினையியலில் "முன்னிலைவியங்கோள்" என்னும் உஙி-ம் சூத்திரத்துள்ள "பிரிபுவேறுபடூஉம்" என்பதை "திரிபுவேறுபடூஉம்" எனத்திருத்திக்கொள்க. ஏடுகளிலும் அச்சுப்பிரதிகளிலும் "பிரிபு வேறுபடூஉம்" என்றேயிருப்பினும் இச்சூத்திரவுரையின்

முடிவில் "திரிபுவேறுபடூஉஞ் செய்தியவாகியெனவே" என அனுவதித்திருத்தல் அவற்றிலெல்லாங் காணப்படுதலும், இப்பாடத்தில் மோனை நயமிருத்தலும், தமிழ்த்திரிசொற்கள் பல இயற்சொல்லாய் வழங்கப்படும் மலையாளத்தில் "திரிதல்" என்னுஞ்சொல் "பிரிதல்" என்னும் பொருளில் வழங்கப்படுதலும், பெயரியலில் "இருதிணைச் சொற்கு மோரன்ன வுரிமையிற், றிரிபு வேறுபடூஉ மெல்லாப்பெயரும்" என்னும் ௧௮-ம் சூத்திரத்தும் திரிபுவேறுபடுதலென்பது இப்பொருளில் வந்திருத்தலும் இத்திருத்தத்திற்காதாரமாம்.

(௨) வினையியல் ௨௯-ம் சூத்திரத்தில் "ஒருவற்குமொன்றற்கும்" என்பதை "ஒருவர்க்குமொன்றற்கும்" எனவும், (௩) இடையியல் ௪-ம் சூத்திரவுரையின் உதாரணத்தில் "பண்டுகாடுமனின்று கயல்பிறழும் வயலாயிற்று என்புழி அஃதாக்கங்குறித்து நின்றது" என்பதை "பண்டுகாடுமன் என்புழி இன்று கயல்பிறழும் வயலாயிற்றென அஃதாக்கங்குறித்து நின்றது" எனவும் திருத்திக்கொள்க. இத்திருத்தங்களுக்காதாரம், கோமளபுரம் - இராஜகோபால பிள்ளையவர்கள் பதிப்புப்புத்தகமும், ஏடுகளும், பொருட்பொருத்தமுமாம்.

பின்னுஞ்சில இவ்வாறுளவேனும் அவை விரிவஞ்சிவிடப்பட்டன.

அ. கோபாலையன்.

## மாட்சிதங்கிய பரோடாமகாராஜா அவர்கள் கைத்தொழிலைப்பற்றிச் செய்த

# மகோபந்நியாசம்.

[கல்கத்தாவில், சமீபத்திற்கூடிய 2-வது இந்தியக் கைத்தொழிற் சங்ககாலத்தே, கல்விசெல்வங்களால் ஆன்ற பெரியோர்கள் நிறைந்த மகாசபையில், மகாராஜசிரோமணியாயுள்ள மாட்சிதங்கிய கைக்வாரவர்கள் ஆங்கிலத்திற் செய்த மகோபந்நியாசத்தைத் தழுவிய தமிழ்மொழிபெயர்ப்பு அடியில் வருமாறு.]

கனம் அக்கிராசனாதிபதிக்கும், இச்சங்கத்துப் பிரதிநிதிகளுக்கும் மற்றுமுள்ள கனவான்களுக்கும் விஞ்ஞாபனம்.

நான் ஐரோபா அமெரிக்காச் சுற்றுப் பிரயாணங்களிலிருந்து திரும்பியபின், சென்றமாதந்தான், உங்களது அறிவாற்றல் மிக்க காரியதரிசியாகிய ராவ்பஹதூர் ஆர். என். மதோல்கார் (R. N. Mudholkar) என்பால் வந்து, நான் இத்தொழிற் சங்கத்தில் பிரதமோபந்நியாசம் செய்தற்கு அவசியம் வரவேண்டுமென்றும், இது, தொழிற்சங்கத்தாரின் ஏகோபித்த வேண்டுகோளென்றும் எனக்குத் தெரிவித்தார். இயற்கையாகவே, இவ்வேண்டுகோட்கு இணங்குவதில் நான் சிறிது பின்வாங்கினேன். ஏனென்றால், அந்நியதேச யாத்திரையிலிருந்து இப்போதுதான் திரும்பி வந்தபடியால் என்மேற்சுமந்துள்ள அரசியல்வேலை மிகுதியாலும், நீங்கள் கைக்கொண்ட இவ்வுத்தம காரியத்தில் உங்களுக்குப் புத்திமதி சொல்லக்கூடியவர்கள், என்னைவிட, மேலானவர்களிருக்கிறார்களென்று நான் தெளிந்ததாலுமேயாம். என்றாலும், கனவான்களே! இக்காரணங்களைச் சொல்லி நான் உங்கள் காரியதரிசியிடமிருந்து தப்பிக்கொள்ள முடியவில்லை. அவர், தொழிற்சங்கத்தாரது வேண்டுகோட்கு இணங்கும்படி என்னைக் கட்டாயப்படுத்தினதுமன்றி, நான் அப்படி இணங்குவதானது நம்மெல்லா இருதயத்திலுமுள்ள பெருங்காரியமாகிய தேசநன்மைக்கு உழைப்பதாகும் என்று பக்ஷத்துடன் எனக்கு வற்புறுத்தினார். இம்மொழிக்கு நான் இணங்கவேண்டியது கடமையென்று நினைத்

தேன். தற்காலத்துக் கைத்தொழிலபிவிர்த்தியின் பொருட்டு உழைக்க நாமெல்லோரும் கடமைப்பட்டிருக்கிறோம் என்பதைத் திடசிந்தையுடன் உணருகிறேன்.

நம் ஜீவனோபாயமுறை எதுவாயிருந்தாலும் சரி, நம்தேசக் கைத்தொழிலபிவிர்த்தியைக் கருதாமல் அலக்ஷியம்செய்வது,நம்மையும் நம் நாட்டையுமே புறக்கணித்ததாகும். நான் அடிக்கடி உய்த்துணர்ந்து வெளியிட்டிருக்கிறபடியே, இன்றைக்கும் வெளியிடுவதென்னவென்றால், பொது நன்மை என்பது எல்லாருக்கும் ஒரு தன்மைத்தானது; உங்கட்கு எது நன்மைபெருமைகளைக் கொடுக்கிறதோ அதுவே எங்களுக்கு நன்மைபெருமைகளைக் கொடுக்கிறது. உங்கள் க்ஷேமலாபத்துக்கு எது இடையூறாயிருக்கிறதோ, அது எங்களுக்கும் அப்படியே அமைகிறது. மேலும், நம் வாழ்நாளுடன் சம்பந்தப்பட்ட பற்பல துறைகளில் நாம் உழைக்கும் உழைப்பு ராஜகீய விஷயமானாலும் சரி, ஜாதியாசாரவிஷயங்களானாலும் சரி, கைத்தொழில் விஷயமாயினும் சரி—இவையெல்லாம் ஒன்றோடொன்று ஒற்றுமைபெற்றவையாதலால், ஒன்றில் நாம் விசேஷத் தேர்ச்சியடையும்போது, மற்றத்துறைகளிலும் அவ்விதத் தேர்ச்சியை நாம் அடைந்திருக்கவேண்டியது ஆவசியகமாகின்றது. மேல் தோற்றத்தில் வித்தியாசப்பட்ட துறைகள்போலக் காட்டி, அபிவிர்த்தியாகிய பலனையளிப்பதில் ஒத்தகாரணமாயுள்ள பேற்படி மனிதவுழைப்புகளே வாழ்நாள்களைச் சிறப்பித்து ஓங்கச்செய்கின்றன. நாம் விஷயங்களைப் பரந்தகண்ணோடு பார்த்தாற்றான், "அபிவிர்த்தி" என்னும் யந்திரத்தின் கூறுகளே மேற்குறித்த துறைகள்—என்பது வெளியாகும்.

## கைத்தொழிலின் பூர்வசரித்திரம்.

கனவான்களே! பூர்வகாலத்து இந்தியக்கைத்தொழில்களைப் பற்றி விவரமாய்ச்சொல்லி அதிக நேரத்தைக்கழிக்க மாட்டேன்; என்றாலும்,அவைசம்பந்தப்பட்ட குறிப்பான சிலவிஷயங்களை மாத்திரம் சுருங்கச்சொல்லவேண்டுவது இதுபோன்றசந்தர்ப்பத்துக்கு மிகவும் ஏற்றதாகும் முற்காலந்தொட்டே நம் இந்தியதேசம் அழகான வஸ்திரவகைகளுக்குப் பேர்பெற்றதாயிருந்ததென்பது உங்க

ளுக்குத்தெரியும். பழைய சரித்திரகாரர்கள், இந்தியப்பஞ்சு வியாபாரமானது பூர்வகாலத்தில் அஸிரியா, பாபிலோன் முதலிய இடங்களிலும் * பரவியிருந்ததென்று சொல்லுகிறார்கள். நம் இந்தியாவொன்றிலேயாத்திரம் உண்டாகத்தக்க அவுரிநீலங்களின் சின்னங்கள், எகிப்தியர் காத்துவந்த பிரேதங்களின் (Mummy) †வஸ்திரங்களிலே பூதக்கண்ணாடியின் உதவிகொண்டு கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இந்தியத் தந்தங்களும் மற்றுமுள்ள அநேக பண்டங்களும் எகிப்துதேசத்துக்கு ஏற்றுமதிசெய்யப்பட்டிருக்கலாமென்று ஊகிக்கப்படுகிறது. பிராசீனபிரசித்த வியாபாரிகளாகிய பினீஷியர்கள் ‡ நம் இந்தியாவோடு பிரபலமாக வியாபாரஞ்செய்தார்கள் என்பதில் சிறிதும் ஐயமில்லை. மேல்நாடுகளுக்கு இவர்கள் கொண்டுபோய் வியாபாரஞ்செய்த வாசனைச்சரக்குகள், விலையுயர்ந்த கற்கள், கருங்காலிமரங்கள், தங்கவேலை சித்திரத்தையல்வேலைப் பண்டங்கள்—ஆகிய இவையெல்லாம் இந்தியாவிலிருந்து கொண்டுபோனவைகளே.

இவர்க்குப்பின் வெகுகாலம் கழித்துத்தான் கிரேக்கர்கள் நாகரீகமடைந்தார்கள். "சரித்திரகர்த்தர்கட்குத் தகப்பன்" என்னும் புகழ்பெற்ற ஹெரடோடஸ் (Herodotus) என்பவர், நம் இந்தியப் பருத்தியை "மரங்களில் வளரும் உரோமம்" என்றும், "ஆட்டுரோமத்தைக் காட்டிலும் நயமும் விலையுயர்ந்ததுமானது" என்றும் சொல்லுகிறார்.

கிறிஸ்தப்தத்துக்கு முந்திய நூற்றாண்டுகளில் இந்தியாவுக்கும் மேனாட்டுக்கும் பெருத்தவியாபாரம் நடந்துவந்தது. ரோமாபுரி வல்லமையும்கீர்த்தியும் அடைந்திருந்த காலத்தும், அலெக்ஸாண்டரியா செழித்தவியாபாரஸ்தலமாகிய காலத்திலும் நம்முடைய.

---

* இவை ஆசியாகண்டத்தின் தெற்குக்கோடியிலுள்ள நாடுகள். பூர்வத்தில் நாகரீகம் பெற்றிருந்த தேசங்கள் இவை.

† இப்பிரேதங்கள், பூர்வீகஎகிப்துதேசத்தாரால் சுகந்ததிரவியமிட்டுப் பெரிதும் போற்றிக்காக்கப்பட்டன. இவைகள் நீலநதி (Nile) பாயும் பிரதேசங்களிலுள்ள குகைகளில் கண்டுபிடிக்கப்பட்டன.

‡ இவர்கள் முன்னாளில் மிக்க நாகரீகம் பெற்ற வியாபாரிகள்; இவர்கள் பூர்வகாலத்தே கப்பல் வியாபாரத்தில் தேர்ந்தவரல்லராயினும், ஆசியாமைனர், சிரியா; மற்றும் மத்தியதரைக்கடலைச் சார்ந்த நாடு இவைகளில் இவர்கள் வியாபாரம் மிகுந்திருந்தது.

வியாபாரம் அதிதீவிரமாகவும் மிருதியாகவும் நடந்தது. பட்டுநூல் வகைகளும், நீலக்கற்களும், அவுரி நீலங்களும், வஸ்திரவகைகளும் ஸிந்துநதி முகத்துவாரத்திலுள்ள துறைமுகங்களிலிருந்து ஏற்றுமதி செய்யப்பட்டன. முக்கியமான கடல்வியாபாரஸ்தானமாகிய— இந்துக்களால் 'பாருகச்ச' என்றும், ரோமரால் 'பாரிகாஸா'என்றும் அழைக்கப்பட்ட—பிரீச் (Breach) துறைமுகத்தில், தங்கம்வெள்ளி முதலான லோகங்களும், கண்ணாடி பவளம் வாசனைத்திரவியம் இவைகளும் இறக்குமதியாகியும்; உயர்ந்த விலைபெற்ற கற்கள்,மிகவழகான துணிமணிகள், மற்றும் வஸ்திரவகைகள், தந்தம்,கருங்காலிவயிரங்கள், மிளகு, பட்டு முதலிய பண்டங்கள் ஏற்றுமதியாகியும் வந்தன.

கி. பி. 3-வது நூற்றாண்டில், ரோமராஜ்யம் தளர்வடைந்தது. தளரவே, கான்ஸ்டான்டிநோபிள் துறைமுகமானது—முன்பு அலெக்ஸான்டிரியா மூலம் நிகழ்ந்துவந்த—ஆசியா வியாபாரத்தில் பெரும்பகுதியைக் கவர்ந்துகொண்டது.

கிறிஸ்தப்தத்துக்கும் பிற்பட்ட நூற்றாண்டுகளில், இந்தியாவானது அடிக்கடி படையெடுப்புகளுக்கு உட்பட்ட நிலைக்களமாயிற்று. சித்தியரும் ஊணரும் இந்தியாவின் மேற்கு பாகாணங்களைக் கொள்ளையாடி அழிக்கலானார்கள். ஆனால், ஒரு சிறந்த மகாவீரனும், நம்பாஷாபிவிர்த்தி சம்பந்தமாகப் பிரலிந்திபெற்றவனுமாகிய விக்கிரமாதித்தியன் இவ்வந்நியப்படையெடுப்புகளை எதிர்த்து ஒழித்தான். அப்பால், கி. பி. 6-ம் நூற்றாண்டுமுதல் 10-ம் நூற்றாண்டுவரை, இந்தியா, அந்நியர் முற்றுகையிலிருந்து தப்பி இருந்தது. இந்தக்காலமத்தியிலேதான், பாஹியான் (Fa-Hian) ஹியூந்ஸாங் (Hionen-Tsang) என்ற சீனயாத்திரிகர்களும் மற்றும் அநேகரும், மதசம்பந்தமானவிஷயங்களை அறிந்துபோவதற்காக, நம்நாட்டுக்குயாத்திரைவந்து; அப்போதிருந்த கைத்தொழில்களையும் ஞானவிருநாகரிகக்கல்வித்துறைகளையுங் கண்டு வியப்படைந்ததோடு, ஒவ்வொரு நகரத்திலுமுள்ள இந்து தேவாலயங்களையும், அவற்றின் பக்கத்திலிருந்த பௌத்தப்பள்ளிகளையும் பற்றிக் குறிப்பெழுதியிருக்கிறார்கள். நம் இந்திய வியாபாரிகள் ஜாவாமுதலியதீவுகளிலும் குடியேறியிருந்

தனர். "தமிரலிப்பட்டி" அல்லது 'தமிழுக்' என்ற துறைமுகத்திலிருந்து ஓர் இந்தியக்கப்பலில் ஏறித்தான், பாஹியான் தன் தேசநோக்கிப் புறப்பட்டது.

ஐரோப்பிய நாடுகட்குப்போய் அதன் முக்கிய நகரங்களில் சுற்றுப்பிரயாணஞ்செய்திருப்பவர்கள், ஜாவாவிலிருந்து டச்சுக்காரரால் எடுத்துக்கொண்டு போகப்பட்ட இந்துதெய்வவிக்கிரகங்களை லீடன் நகர்ப் பொருட்காட்சிச்சாலையிற் பார்த்திருக்கலாம். இந்தியாவிலிருந்து சென்ற வியாபாரிகளாலும் மற்றுங் குடியேறியவர்களாலும் ஜாவாத்தீவில் இந்துமதம் ஸ்தாபிக்கப்பட்டிருக்கவேண்டுமென்பது நன்றாகத்தெரிகிறது.

அந்தகாரகாலம் (Dark ages) முடிந்தபின்பு இந்தியவியாபாரத்துக்கு வேனிஸ் துறைமுகம் வியாபாரவழியாயிருந்தது. 15-ம் நூற்றூண்டு முடிவில் வாஸ்கோடிகாமாவால், ஆபிரிகாத்தென்கோடியிற் கண்டுபிடிக்கப்பட்ட புதுமார்க்கத்தின் மூலம் நடந்த வியாபாரப்பெருக்கால் அவ்வேனிஸ் வியாபாரமகிமை போயேவிட்டது. வேனிஸ் சீர்குலையவும் போர்ச்சுகல் (Portugal) பிரதாபத்திலும் வாணிபத்திலும் வளர்ந்தோங்கியது. 16-ம் நூற்றூண்டில், சீனதேசம் வரையுள்ள ஆசியாத்தென்கடற்கரை முழுதிலும் வியாபாரத்தலைமை போர்ச்சுகீயரிடமேயிருந்தது. ஆனல், அடுத்த 17-ம் நூற்றூண்டில் டச்சுக்காரரே முன்னவர்வகித்த ஸ்தானத்தையடைந்து, இந்திய வியாபாரத்தால் தங்களை தனவந்தர்களாக்கிக்கொண்டார்கள். கொஞ்சக்காலம் கிரமித்து ஆங்கிலேயர்கள் அவ்வியாபார அரங்கில் ஆடத்தொடங்கினர்கள். தொடங்கி, 18-ம் நூற்றூண்டில், டச்சுக்காரரிடமிருந்து, அவர்கள் கீழைத்தேச வியாபாரத்தைப் பறித்துவிட்டார்கள். சென்ற ஆயிரவருஷகாலத்துக்குள் ஐரோப்பாவிலுள்ள ஒவ்வொரு ஜாதியாரும் ஒருவர்பின் ஒருவராய்ப் பிராபல்யத்தையும் ஐசுவரியத்தையும் அடைந்தது கீழைத்தேச வியாபாரத்தாற்றூன். பிராசீனகாலத்தில், பெருத்த வியாபாரிகளான பினீஷியர்கள், அரபியர்கள்—இவர்கள் அடைந்திருந்த ஸ்தானத்தை, கான்ஸ்டான்டிநோபிள், வேனிஸ், போர்ச்சுகல், ஹாலந்து, இங்கிலாந்து முதலியதேசத்தா

அடைந்து, விலையுயர்ந்த இந்தியக் கைத்தொழிற்பண்டங்களை ஒருவர்பின் ஒருவராய்க் கொண்டுபோனவர்களாயிருக்கிறார்கள்.

## இங்கிலாந்தின் வியாபாரச் சூழ்ச்சி.

18-ம் நூற்றாண்டில், இங்கிலாந்து இந்தியாவைக் கைப்பற்றத் தொடங்கியபோது, அது அயர்லந்துடனும் குடியேற்ற நாடாகிய அமெரிக்காவுடனும் செய்துவந்த வியாபார ஏற்பாடுகளையே, இந்தியா விஷயத்திலும் கைக்கொண்டது. அத்தேசத்தாரின் நோக்கமும் முயற்சியும் என்னவென்றால், தன்னைச் சார்ந்த நாடுகளிலிருந்தும் விளைபொருள்களை அப்படியே வாங்கிச்சென்று பின்பு அவற்றைக் கொண்டு தம்தேசத்துக்கைத்தொழிலை அபிவிர்த்தி செய்வதேயாகும். தம்முடைய கைத்தொழில்விருத்தி ஒன்றே கருதி, பிறநாட்டுச் செயற்கைப்பொருளின்பேரில் அக்கிரமத் தீர்வைகளை விதித்து அவற்றை ஒடுக்குவாராயினர். இந்நிலையில், குடியேற்ற நாடாகிய அமெரிக்காதேசம் தன் சுவாதந்தரிய சக்தியை வெளிப்படுத்தித் தனக்கு நேர்ந்த கைத்தொழிலடிமைத்தனத்தினின்றும் தன்னை நிவர்த்தித்துக்கொண்டது. ஆனால் அயர்லந்தும் இந்தியாவுமாகிய இரண்டுமே இவ்விதக்கஷ்டத்துக்குள் அகப்பட்டுக்கொண்டிருந்தன. இதனால், 19-ம் நூற்றாண்டில் இவ்விருதேசத்துத் தொழில்களும் சீர்குலையலாயின. ஆனால், இங்கிலாந்திலோ என்றால், அமோகமாய்க் கைத்தொழிற்சாலைகள் விருத்தியாயின. யந்திர நெசவுத்தறி(Power-loom) கண்டுபிடிக்கப்பட்டபின் இங்கிலாந்தின் கைத்தொழில் வெற்றியானது பரிபூர்த்திபெற்றது.

அது முதற்கொண்டு, இங்கிலாந்து, நாளடைவில், நேர்மையும் நியாயமுமான வியாபார முறையைக்கைப்பற்றலாயிற்று. நாவாய் முறைச்சட்டங்கள் (Navigation Acts) பாரபக்ஷமான சரக்குத்தீர்வை (High Tariff) இவைகள் எடுபட்டன. இக்காலத்திலே, இங்கிலாந்தானது, உலகமுழுவதும் மேலான சுதந்திரவியாபார முறையைப்போதிப்பதாய் முன்னிற்கின்றது. இவ்விஷயமானது, தற்காலத்துள்ள நம் இந்தியக்கைத்தொழிற் சரிதத்தைப்பற்றியும் பேசும்படி எனக்கு ஞாபிக்கிறது.

## தற்கால நிலைமை.

நீராவியாலும், மின்சாரசக்தியாலும் யந்திரோபாயம் அடைந்துள்ளவெற்றி எக்காலத்தும் ஞாபகத்தில் வைக்கத்தக்கது. உதாரணமாக, யந்திரத்தறிகள் விர்த்தியடைந்து, கைத்தறிகாரருடைய ஜீவனோபாயத்தை மெள்ள மெள்ளக் கைப்பற்றிக் கெடுத்துவிட்டதன்றோ! இந்தியாவில் பஞ்சுநெசவுத்தொழில்செய்த அநேகர், சென்ற பத்து வருஷத்துக்குள்ளேயே, 100-க்கு 23-குறைந்துவிட்டார்கள். மேலானயந்திரங்களாலே பருத்தியினின்று கொட்டை நீக்கப்பட்டும், பஞ்சுக்கட்டுகள் அழுத்தி இறுக்கப்பட்டும் வருவதால், அவ்விருதொழில்களையுங் கொண்டு பிழைப்பவர்களின் தொகை, சரியாய், 100-க்கு 8-வீதம் குறைந்துவிட்டது. என்றாலும், மேற்கூறிய நெசவுத்தொழிலே, நவீனக்கைத்தொழில்முறைப்படி யுக்தியோடு சீர்திருத்தப்பட்டால், ஐரோப்பியச் செயற்கைப்பொருள்களோடும் போட்டி போடக்கூடும் என்று தெரிகிறது. பப்பாய் யந்திரசாலைகளில் தினந்தோறும் உத்தேசம் 170,000-கைத்தொழிலாளிகள் வேலைசெய்து பிழைக்கிறார்கள். மேலும், 30,000-க்கு மேற்கொண்ட பேர்கள் பருத்தியினின்று கொட்டைநீக்கும் பிரஸ்ஸுகளில் வேலைசெய்து ஜீவனோபாயந் தேடுகிறார்கள்: ஏறக்குறைய 40-வருஷங்கட்கு முன் இந்தியாமுழுதிலும் மொத்தம் 13-பஞ்சியந்திரசாலைகளே இருந்தன. 1876-ல் 47-ஆயின. 1886-ல் 95 உம், 1895-ல்155 உம், ஆக அது விருத்தி அடைந்தது. ஆனால், 1904-லிலோ அதன் தொகை 203-ஆயிற்று. இப்போதுள்ள பஞ்சியந்திரசாலைகள் இன்னும் அதிகமாகும். 40 வருஷங்கட்கு முன்னர் மொத்தம் 4000-யந்திர நெசவுத்தறிகளே இருந்தன. 1904-ம் வருஷம் 47,000 ஆயின. நெசவுத்திராட்டினங்கள், 40-வருஷத்துக்கு முன், 300000-க்குச் சற்றுக்குறைவாகவே இருந்தன. ஆனால், 1904-லிலோ 50-லக்ஷத்துக்கு மேலேபோயிற்று. இந்தத்தொகை, அபரிமிதமான லங்காஷையர் நெசவுத்தொழிற்கணக்கோடு ஒப்பிட்டுப்பார்த்தால், வெகு சொற்பமானதேயாகும். என்றாலும், அவ்விருத்தியானது, நாம் ஒழுங்கான நெசவுத்தேர்ச்சி அடைந்திருக்கிறோம் என்பதைக் காட்டுகிறது. அப்படிக்காட்டுவதோடு கூட, நம் நோக்கமும் நன்மையும் அதுவாக

வே கொண்டு உழைத்துவருவோமானால், காலக்கிரமத்தில், இன்னும் அதிகமான தேர்ச்சியடையலாம் என்பதையும் அது குறிக்கிறது. நமது வருஷாந்தர நூற்புரியின் நிறை ஏறக்குறைய 600,000,000-ராத்தல் ஆகும். இந்த மொத்த நிறையில், 100-க்கு 30-நம்நாட்டுக் கைத்தறியாளரால் உபயோகப்படுத்தப்பட்டு வருகிறதென்பதைக்கேட்க சந்தோஷமே உண்டாகிறது.

கனவான்களே! இந்தியாவில் விவசாயத்துக்கு அடுத்து நிற்கும் பெரிய தொழிலாகிய யந்திரக்கைத்தறிகளில் அடைந்துள்ள அபிவிர்த்தியைக் குறித்து, ஒவ்வொரு இந்திய அபிமானியும் நியாயமாகவே பெருமை பாராட்டலாம். சென்ற இரண்டு வருஷங்களுள், அஹமதாபாத்திலும் பம்பாயிலும் தற்காலத்துச் "சுதேசியக்" கிளர்ச்சியாற்றான் புதிதாக அநேகயந்திரசாலைகள் கிளம்பின. சிறிய பரோடா ராஜ்ஜியத்திலுங்கூட, இந்த அபிவிர்த்தியை நிதர்சனமாய்ப் பார்க்கலாம். இதன் தலைநகரில், 20-வருஷங்களாக ராஜாங்கத்தில் ஒரு யந்திர நெசவுத்தறி ஸ்தாபிக்கப்பட்டு, ஜனங்கள் தாங்களே இவ்விஷயங்களினியற்கையை அறிதற்கு ஒரு முன்மாதிரியாகவும், மற்றக் கூட்டுவர்த்தகர்கள் இதையொத்த யந்திரசாலைகளை நடத்தும்படி தைரியப்படுத்தவும் ஆகிய இவ்விருநோக்கத்தைக் கொண்டே அது நடத்தப்பட்டு வருகிறது. இம்மாதிரியான வழிகாட்டியே பலவிடங்களிலும் பரவிப்பலனைக்கொடுக்கக்கூடியது. இதன் பலனாக, இப்போது ஒரு பிரத்தியேகக் கூட்டுக்கம்பேனியார் சேர்ந்து, இராஜாங்கத்திடமிருந்து அவ்யந்திரத்தை விலைக்கு வாங்கி அதிசிலாக்கியமான பயனோடும் அதை நடத்திவருகிறார்கள். சமீபத்திற்றான் மற்றொரு யந்திரமும் ஸ்தாபிதமாகி வேலைசெய்யச் சித்தமாயிருக்கிறது. மூன்றாவதாக ஒரு யந்திரசாலை இப்போதுதான் கட்டியாகின்றது. இதுவுமன்றி, பருத்தியினின்று கொட்டையெடுக்கும் யந்திரசாலைகளும் மற்றும் நீராவியந்திரசாலைகளும் ராஜ்ஜியமுழுதும் பலமடங்கு பெருகிவருகின்றன. மேலும், கைத்தறிகளின் தொகையும் சில பட்டணங்களில் இரட்டித்திருக்கிறது. இந்திய வியாபாரத்தில் எடுபடும் சாதாரண நூற்கண்டுகளில், பெரும்பாகம் இங்கேயே நூற்கப்பட்டனவாயிருக்கின்றன. ஆனால், வெகு சொற்பந்தான் அந்நிய

நாட்டிலிருந்து இறக்குமதியாகிறது. மேலான நம்பருள்ள நூற்கண்டு சம்பந்தப்பட்ட மட்டிலேதான், இங்கேயே நூற்கப்படுவது, அந்நியநாட்டிலிருந்து வரவழைக்கப்படுவதிலும் அதிகக்குறைவாயிருக்கிறது. இங்கேயே நெய்யப்படுவதைக்காட்டிலும் மஸிலின்துணியும் ஏனையஅணியாடைகளும் சொற்பக்கிரயத்துக்கு இறக்குமதியாவதோடு கூட, அத்துணிகள் வெகுவிசித்திரமானவையாயும், பலநிறங்கொண்டதாயும், வெவ்வேறு வகைப்பட்டதாயும் இருக்கின்றன. கீழைத்தேசத்துக் கைத்தறிகள் முற்காலத்தில் நேர்த்தியான ஆடையழகிற் பேர்வாங்கினவைகளாயிருந்தபோதிலும் தற்காலத்தில் அவை, பெரும்பான்மை எடுபட்டே போய்விட்டன. அச்சடித்துணிகளும் சீட்டித்துணிகளும், பிராஞ்சு, இங்கிலந்து, ஜெர்மனி—இத்தேசங்களிலிருந்து நப்தேசத்திற்கு ஏராளமாக இறக்குமதியாகின்றன. இதேபண்டங்கள்இந்தியாவை ஒட்டிய நாடுகளிலும் பாரசீகத்திலும் ஆப்கானிஸ்தானத்திலும் மிகவும் விலையாகின்றன.

## நெசவுத்தொழிற் சாமான்கள்.

இவ்விதமாக, இதுவரைக்குமுள்ள நம்நெசவுத்தொழிலபிவிருத்தியைக்குறித்து நாம் பெருமைபாராட்ட இடமிருந்தாலும் நாம் இன்னும் அதிக ஊக்கத்தோடு நன்கு உழைக்கவேண்டுமென்பதற்கு அதிக நியாயமிருக்கிறது. ஏனென்றால் நாம் இப்போதுதான் ‘அபிவிருத்தி’ யென்னும் முன்னணையிலிருக்கிறோம். சென்றவருஷம் நம் பஞ்சியந்திரசாலைகளினின்று சுமார் 600,000,000-கஜம் துணி வெளிப்போந்தது. ஆனால் அந்நியநாட்டிலிருந்து இறக்குமதிசெய்ததோ 2000,000,000- கஜம் துணியாகும். இப்பெருந்தொகையை உத்தேசிக்க நம்கைத்தொழிலடையவேண்டிய அபிவிருத்தியின் பேரளவை நாம் அறிந்துகொள்ளலாம். நாம் அந்நியநாடுகளுக்கு 213,000,000-ரூபா பெறலான பருத்தியனுப்பி, இந்தநெய்யப்படாத பருத்திக்குப்பிரதியாக 390,000,000க்கு துணிமணிகள் இறக்குமதிசெய்ய இடங்கொடுக்கிறோம். ஆகையினால் நம் இந்திய ஜாதியார் தங்கள் ஆடைக்குவேண்டியிருக்கிற 4-ல் ஒரு பாகந்தான் தாமேபண்ணிக் கொள்ளுகிறார்களென்பது விளங்கும்.

நம்தேசத்தாருக்குப் போதுமான அளவு ஆடைநெய்யும்படியான திறமை உண்டாம்வரை நாம் திருப்தியடையக்கூடாது.

கனவான்களே! நான் முன்பு இந்தியாவின்பஞ்சுத்தொழிலைப் பற்றிக் கொண்ட அபிப்பிராயங்களையே நீராவியுபயோகத்தை வேண்டியிற்கும் மற்றத்தொழில்களுக்கும் ஒருவாறு ஒப்பிடலாம். பங்காளத்தில் சணற்றொழில் (Jute industry) விசேஷமென்பது தெரிந்ததே. அத்தொழில் அங்கே வருஷாவருஷம் அதிகமாகிக்கொண்டேவருகிறது.—உதாரணமாக,—1895-ம் வருஷத்தில் 28-யந்திரங்கள்மாத்திரம் இருக்க, 1904ல் 38-ஆனது. வட இந்தியாவிலும் பஞ்சாபிலும் ஆட்டுரோமத்தொழிற்சாலைகள் (Woollen factories) இருக்கின்றன. அவையுண்டாக்கிய கம்பளத்தின் மொத்தநிறை 1895-ல் 22½ - லட்சம் ராத்தலிலிருந்து 1904-ல் 35 - லட்சம் ராத்தலாயிற்று. பஞ்சுத்தொழிலில், இவ்வளவு சித்தியடைந்த நம்தேசத்தார் தங்கள் பஞ்சுத்தொழிலோடுகூட கம்பளி, சணல் முதலிய தொழில்களையும் பின்பற்றுவார்களென்று நான் நம்புகிறேன்.

## பட்டுநூற்றொழில்.

பட்டுநூற்றொழில் இந்தியாவின் அதிபுராதன கைத்தொழில்களில் ஒன்றாகும். ஆனால் அதுவும் மற்றப் புராதனகைத்தொழில்களைப்போலவே 18-ம் நூற்றாண்டிலும் 19-ம் நூற்றாண்டுத் தொடக்கத்திலும் அநுசரிக்கப்பட்ட அக்கிரமமான வியாபாரச் சூட்சியினால் தளர்ந்துபோனது என்றாலும், அது விர்த்தியாகும் என்பதற்குச் சில சின்னங்கள் தோன்றுகின்றன. இந்தியாவின் அநேகபாகங்களில் தாஸார்ப்பட்டு (Tassarsilk) நெய்யப்பெற்று ஐரோப்பாவுக்கு ஏற்றுமதிசெய்யப்படுகிறது. அசாமில் (Assam) பட்டுச்சேலைகளைத்தான் ஸ்திரீகள் உடுத்துகிறார்கள். ஒவ்வொரு குடும்பத்தாரும் தங்களுபயோகத்துக்குவேண்டிய பட்டுவஸ்திரங்களைத் தாங்களே நெய்து கொள்ளுகிறார்கள். பங்காளத்தில் விதைகளின் நயத்தைப் பரிசோதிப்பதற்கு (Testing of the seed) சிலசாஸ்திரியமான முறைகளைக் கைக்கொண்டு நடத்திக் கொஞ்சம் தேர்ச்சியடைந் திருக்கிறார்கள். பஞ்சாபில் பட்டுநூற்பூச்சிகளைவிருத்திசெய்வதற்கென்று பலமுறை

எடுக்கப்பட்ட முயற்சியில் தக்க பலன்கிடைக்கவில்லை. காஸ்மீரில் இத்தொழில் அத்தேயத்தை ஒட்டின தொழிலாயிருக்கிறது. அங்கே ராஜாங்கத்தார் அதை விருத்திபண்ண முயன்றும்வருகிறார்கள். நவீன நாகரீகப்பயிற்சிபெற்ற ராஜ்ஜியமாகிய மைசூரில் (Mysore) இத்தொழிலைப்பற்றி அதிக சிரத்தையெடுக்கப்பட்டுவருகிறது. பரோடா ராஜ்ஜியத்தில் நான் என்னால் ஆனமட்டும் இத்தொழிலைப் பரப்பியும் அபிவிருத்திபண்ணியும்வருகிறேன். இந்தியாவில் 1904-ல் இந்தப்பட்டுயந்திரசாலை மொத்தத்தில் 11-ஆகும். ஆனால் ஏராளமானபட்டு கிரகங்களில் நூற்கப்பட்டும்வருகின்றது.

## மற்றக்கைத்தொழில்கள்.

கனவான்களே! இதுவரை நான் நெசவுத்தொழில்களைப்பற்றி மாத்திரம் சொல்லிவந்தேன். இந்தியாவிலுள்ள மற்றக் கைத்தொழில்களைக்குறித்து அதிகமாய்ப்பேச அவகாசமில்லை. ஆதிகாலந்தொட்டு,பித்தளைசெம்புப்பாத்திரங்களே உபயோகப்பட்டுவருகின்றன. ஆனால் சமீபத்தில் ஐரோப்பாவின் விலைசரசமான எனாமலின் (Enamel) மிகுதியான விற்பனையாற்றான், அக்கைத்தொழில்களைப் பற்றிப் பயம் ஜனிக்கிறது. அலுமினியம் (Aluminium) என்னும் லோகத்தின் கைத்தொழில் புதிதாகக்கிளம்பியிருக்கிறது. சென்னையில், சாட்டர்டன் துரையவர்கள் அத்தொழிலை அதிகமாய் நம் தேசத்தில் விர்த்திபண்ணினதற்கு நன்றிபாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம்.

சமீபகாலத்துப் பௌமியசாஸ்திர சிரேஷ்டர்களால் நடத்தப்பெற்ற பரிசோதனையில், மத்திய இந்தியாவிலே (Central India) இதுவரை கண்டுபிடிக்கப்படாதிருந்த விலைபெற்ற இரும்புக்கனிகள் வெளிக்கு வந்திருக்கின்றன. ஆகையால் இரும்புத்தொழில் விருத்தியாவதற்கு அதிக இடமிருக்கிறது. இதுவரை கண்டுபிடிக்கப்பட்ட இடங்களைத்தவிர மற்றும் அநேக இடங்களில் இரும்புக்கனிகளிருப்பதற்கு அடையாளமான ஓட்டக்குறிகள் (Veins) கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. என் நண்பரான கனம் தாதா (Mr. Tata) வால் ஏற்படுத்தப்பட்ட கம்பெனிகள்போலஇன்னும் துணிந்து முயலும் சில கம்பெனியார் கிளம்பி இச்சுரங்கங்களை வெளிக்குக்கொண்டுவந்து

நடத்துவார்களானால், அவர்களுக்கு வெகு நல்ல க்ஷேமகாலமாகு மென்பது திண்ணம். நம் தேசத்து நிலக்கரிகள் சுத்திசெய்யப்படுவ தோடு (Refined), போக்குவரவுச் சாதனங்களும் இலகுவும்நயமு மாக ஏற்பட்டால், அந்நியதேசத்திலிருந்து ஏராளமான இரும்புப்ப ண்டங்கள் வரவழைப்பதைக்காட்டிலும், நம்தேசத்திலேயே உருக்கி வார்த்துக்கொள்வது அதிகலாபகரமென்று நன்கு காணலாம். கனம் தாதாவின் காரியமுறை (Scheme) ப்படி தகுந்த இரும்புக்கனியுள்ள இடத்தைக் கண்டுபிடித்த பேர்போன பௌமிய சாஸ்திரியாகிய (Geologist) பி. என். போஸ் என்பவரை இத்தொழிற் சங்கத்து வரவேற்கும் (Chairman of the Reception Committee) கமிட் டித்தலைவராக நீங்கள் தேர்ந்ததைக்குறித்து அதிக சந்தோஷப்படு கிறேன். தாதாவின் காரியமுறையைப்பற்றி இன்னும் அவர் குமா ரர் யோசித்துவருகிறார். அவரை நான் சமீபத்தில் சீமையில் சந்தி த்துச் சந்தோஷிக்கலானேன். 1904-ம் வருஷத்தில் இந்தியாவில் 89-இரும்புத் தொழிற்சாலைகள்தானிருந்தன; சமீபகாலத்திற்குள் அவை அதிகரிக்கும் என்று நம்பலாம்.

## பங்காளத்து நிலக்கரி விளைநிலம்.

நிலக்கரியுள்ள இடம் பங்காளத்தில்மிகுதியாயிருக்கிறது. 1904-ம் வருஷத்தில் இந்தியாமுழுதும் மொத்தம் எடுக்கப்பட்ட 2-கோடி ரூபா விலையுள்ள 80-லக்ஷம் இராத்தல் நிலக்கரியில், பங்காளத்திலே தான் 70-லக்ஷராத்தல் வெட்டியெடுக்கப்பட்டதாயிருந்தது. இந்தத் தொகைகள் உங்களுக்குப் பிரமாதமாகப் படலாம். ஆனால் இங்கி லாந்தில் ஒரு வருஷகாலத்தில் வெட்டியெடுக்கப்படும் 200,000,000-ராத்தலுள்ள நிலக்கரியை யுத்தேசிக்கும்போது இந்த 80,000,00-ரா த்தல் எந்தமூலை? தக்கமுதலோடும் சிறந்த சாஸ்திரமுறையோடும் இத்தொழில் நடைபெறவில்லையாயினும், நம்தேசத்தார் இந்நிலக் கரிச் சுரங்கங்களிலேயும் தொழில்செய்து பிழைக்கிறார்கள். இங்கி லாந்தில் அநுபவமுதிர்ச்சியோடுகூடிய நிலக்கரிச் சுரங்கவேலையைக் கற்றுவரும்படி சில இந்தியவாலிபர்களுக்கு இந்தியகவர்ன்மெண்டார் உதவிச்சம்பளம் கொடுக்கிறார்களென்பது சந்தோஷத்தைக்கொடுக்கி றது. நிலக்கரித்தொழிலினால் ஆகும் முக்கியமேன்மை யென்னவெ

ன்றால், நிலக்கரி விளைவு அதிகமாவது, மற்றக்கைத்தொழில்கள் பல்கிப்பெருகுவதற்கு முக்கியசாதகமாயிருக்கிறது. மற்றெல்லாக் காரணங்களைக்காட்டிலும், தற்காலத்தில் இங்கிலாந்தின்மேன்மைக்குக்காரணம் நிலக்கரியும் இரும்புமேயாகும்.

நீராவியின் உதவிகொண்டு செய்யப்படும் முக்கிய தொழிற்சாலைகளின் மொத்தத்தொகைகளும், மற்றக் கைத்தொழிற்சாலைகளின் விபரக்குறிப்பும் யாவரும் எளிதிலறிவதற்காக கீழே காட்டப்பட்டிருக்கின்றன.

| | சாலைகள். | ௵ 1895-ல் | ௵ 1904-ல் |
|---|---|---|---|
| 1. | [illegible] | 148 | 2[illegible]3 |
| 2 | சணற்சாலை | 28 | 38 |
| 3. | கம்பளிச்சாலை | 5 | 6 |
| 4. | பருத்தியினின்று கொட்டை நீக்குதற்கும் அதைச் சுத்தப்பண்ணப்படுத்தற்கும் பின் பஞ்சு அழுத்துவதற்குமான யந்திரசாலைகள். | 610 | 951 |

---